Registered as Newspaper

# உதயன்


பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :61 தை 14ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 28 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051



**முச்சந்தி முரளி**

"சீனத் தயாரிப்பு ஒண்டும் கனநாளைக்கு நிண்டு பிடிக்காது. இதெல்லாம் கவனமா இருந்தா தொத்தாது பாருங்கோ"...




# இலங்கையில் "கொரோனா"

- சீனப் பெண்ணிடம் கண்டறியப்பட்டது
- கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றிலிருந்து சிறப்புச் சோதனைகள்

கொழும்பு, ஜனவரி 28

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான முதலாவது நோயாளி நேற்று மாலை அடையாளம் காணப்பட்டுள்ளார் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அங்கொடையிலுள்ள தொற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த 43 வயதுடைய சீன் நாட்டு பெண்ணொருவரே 'கொரோனா' வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்.

23 >

## அச்சம் வேண்டாம்

யாழ்ப்பாணம், ஜன.28

சீனாவில் தற்போது பரவும் கொரோனா வைரஸ் தொடர்பாக வடக்கு மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று மாகாண சமுதாய மருத்துவப் பிரிவு அதிகாரி மருத்துவர் எஸ்.சிவகணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் இது தொடர்பான தவறான விடயங்கள் வெளியிடப்படுகின்றன. அதனால் மக்களிடையே தேவையற்ற பயமும், பதற்றமும் ஏற்படலாம் என்பதால் இந்தத் தகவல்களை வெளியிடுகின்றோம்.

சீனாவில் குறிப்பிட்ட மாகாணம் ஒன்றில் சுமார் 3 ஆயிரம் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் 80 நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

சீனாவைப் போன்று கொரோனா வைரஸின் நிரந்தரத் தொற்று ஏனைய நாடுகளில் காணப்பட

23 >

## "19"ஐ நீக்குவதில் ராஜபக்ச "ரீம்" குறி!



யாழ்ப்பாணம், ஜன.26

ஜனாதிபதி மக்களின் நலன் கருதி நாடாளுமன்றத்தைக் கலைத்து தனக்காக அரசை அமைக்கும் அதிகாரம் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.

05 >

## தமிழக மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன.28

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 11 பேர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

23 >

## மோசடிகளை மறைக்க "யானை" பிரயத்தனம்

### டியூ பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.28

பிணைமுறி மோசடி தடயவியல் கணக்கறிக்கையை முன்னிலைப்படுத்தி மத்திய வங்கிய பிணைமுறி மோசடியை மறைக்க ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக முயற்சிக்கின்றது.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

23 >

## சிவாஜிக்கு பிடியாணை

முல்லை., ஜன.28

அரச சொத்துக்களைச் சேதப்படுத்தினர் என்று வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு எதிரான தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் மே மாதம் 18ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்

23 >

## மஹிந்த - கப்ரால் கூட்டுத் திருடர்கள்

### ஐ.தே.க. சரமாரித் தாக்குதல்

கொழும்பு, ஜன.28

முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான, மஹிந்த ராஜபக்சவும் அவருடன் கூட்டுச் சேர்ந்து மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரான அஜித் நிவாட் கப்ரால் போன்றோரும் மத்திய வங்கி மோசடியில் ஈடுபட்டுள்ளனர். மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுடன் அஜித் நிவாட் கப்ராலும் தண்டிக்கப்பட வேண்டியவர் ஆவார்.

இவ்வாறு

23 >

## உறங்க சென்றவர் சடலமாக மீட்பு

யாழ்., ஜன.28

மதியம் வீட்டுக்கு வந்து உறங்கியவர் மாலையில் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், இளவாலை

23 >

## அரசியல் கட்சிகளில் அவதானம் அவசியம்

### 'பவ்ரல்' அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜன.28

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யும் போது உரிய கவனம் எடுக்க வேண்டும். தகுதியற்ற அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யக் கூடாது.

இவ்வாறு பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இந்த விடயம் தொடர்பான 7 கோரிக்கைகளையும் அந்த அமைப்பு முன்வைத்துள்ளது.

பவ்ரல்

05 >

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு!

வவுனியா, ஜன.28

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, மகாறம்மைக்குளத்தைச் சேர்ந்த மாரிமுத்து (வயது-60) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நகரப் பகுதியில் இருந்து மகாறம்பமைக் குளம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த

23 >

# முல்லையில் மீள இயங்கும் இரண்டு அரிசி ஆலைகள்

## மாவட்ட செயலகம் நடவடிக்கை

முல்லைத்தீவு, ஜன.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்ட காலமாக இயங்காது காணப்பட்ட இரண்டு அரிசி ஆலைகள் இயங்கச் செய்யப்பட்டுள்ளன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான இரண்டு அரிசி ஆலைகளே இவ்வாறு இயங்கவைக்கப்பட்டுள்ளன.

கடந்த சில வருடங்களாக செயற்படாமல் இருந்த இந்த அரிசி ஆலைகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலரின் உதவியுடன் மீளவும் செயற்படுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

7 இலட்சத்தி 95 ஆயிரம் கிலோ நெல்லை இந்த இரண்டு அரசி ஆலைகளுக்கும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வழங்கி, அதன் மூலம் அரிசியாக்கி, ஆலைகளை இயங்கவைக்க முடிவு செய்துள்ளது.

விசுவமடு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலைக்கு இரண்டு இலட்சத்தி 45ஆயிரம் கிலோ நெல்லும், கரைதுறைப்பற்று பலநோக்குக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சுமார் ஐந்து இலட்சத்தி 50 ஆயிரம் கிலோ நெல்லும் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகத்தினால் அரிசியாக்குவதற்காக வழங்கப்பட்ட நெல்லினால் அரிசி ஆலைகளின் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டதோடு அரிசி ஆலைகள் இதன் மூலம் நன்மையடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஜ-17)

# மெய்வன்மை போட்டி

குருநகர்.ஜன.28

யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் மகா வித்தியா லயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.கலியுகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கிருபா லேண ர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன், சிறப்பு விருந்தினராக குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண பிதா யஸ்ரின் சாள்ஸ் அடிகளாரும் கலந்துகொள்ளவுள்ளார். (ஜ-51)

# மெய் வல்லுநர் திறனாய்வு

கொடிகாமம், ஜன.28

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் இல்ல மெய் வல்லுநர் திறனாய்வு போட்டிகள் நேற்றுத் திங்கட்கிழமை வித்தியாலய மைதானத்தில் அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக் கழக விளையாட்டு பொறுப்பதிகாரி ம.சிறிதாஸூம், சிறப்பு விருந்தினராக கொடிகாமம் பொலிஸ் நிலைய உப பொறுப்பதிகாரி திசாநாயக்கவும், கௌரவ விருந்தினர்களாக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் ஓய்வு நிலை பிரதி அதிபர் வை.மனோகரன், பழைய மாணவர் சங்க யு.கே கிளையின் செயலாளர் திருமதி மாலதி பத்மநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்

கம்பன் இல்லம் ஆயிரத்து 42 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், பாரதி இல்லம் 939 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், வள்ளுவர் இல்லம் 904 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன. (எ-159)



# உள்ளூராட்சி உறுப்பினர்களே கட்சி பேதம் பார்க்காதீர்கள்!

## வடக்கு ஆளுநர் அறிவுறுத்துகிறார்

மன்னார், ஜன. 28

உள்ளூராட்சி சபைகளில் இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடுகள் இல்லாமல், மக்களுக்கான சேவைகளை முடக்காது அனைவருமே இணைந்து மக்களுக்குச் சேவைசெய்ய முன்வரவேண்டும், சபைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.



2018 ஆம் ஆண்டு வடக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை நிதி உதவியில் மன்னார் அடம்பன் பகுதியில் அமைக்கப்பட்ட மாந்தை வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகக் கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் இணைந்து அதைத் திறந்து வைத்தனர்.

அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கூட்டுறவே நாட்டுறவு' என்று சொல்வார்கள். நீங்கள் எல்லோரும் இணைந்தால்தான் ஒரு பிரதேசத்தை, மாவட்டத்தை, மாகாணத்தை உயர்த்த முடியும் என்ற சிந்தனை உங்கள் அனைவருடைய மனதிலும் இருக்கின்றது.

மாகாணத்தில் கூட்டுறவு, கிராம, மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியனவற்றில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற உறுப்பினர்கள் அதிக அளவில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள்.

அவர்கள் மக்களின் பிரதி நிதிகளாக சேவைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தான் அனைவருடைய எதிர்பார்ப்பு.

வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாகவும் இருக்கலாம், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாகவும் இருக்கலாம், எந்த மதத்தையும் இனத்தையும் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம்.

அனைத்து மக்களுடைய தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் மக்கள் தமது கிராமங்களின் பிரதி நிதிகளாக அனுப்புகின்றனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாண மாநகர சபையில் மூன்று நாள்களாகவும், வவுனியா நகரில் ஒரு வாரமாகவும் குப்பைகள் அகற்றப்பட்டிருக்கவில்லை.

பின்னணியாக என்ன காரணங்கள் இருந்தாலும், சபைகளில் இருக்கின்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற வேறுபாடுகள் இல்லாமல் அனைவரும் இணை ந்து மக்கள் சேவையை முடக்காது செயற்படவேண்டும்.

**நெல் விலை**

இவை தவிர, நெல் விலை ஜனாதிபதியால் வர்ரயறைசெய்யப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்படும் நெல் சரியாக காயவைக்கப்பட்டால் ஒரு கிலோ 50 ரூபாவுக்கும் ஈரப்பதன் கொண்ட நெல் ஒரு கிலோ 47 ரூபாவுக்கும் கொள்வனவுசெய்ய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலர்களின் அனுசரணையுடன் கூட்டுறவுச் சங்கங்கள் உடனடியாக நெல்லை மேற்குறித்த விலைக்கே கொள்வனவு செய்வதற்கான உத்தரவை வழங்கியுள்ளேன். அவர்களுக்கான நிதி வசதிகள், நிதி ஏற்பாடுகள் மாவட்டச் செயலர், பிரதம செயலாளர் ஆகியோரின் ஆலோசனைகளுடன் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும். எனவே உங்களுடைய நெல்லை உரிய விலைக்கு விற்பனை செய்ய நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (கு-56)

## வடக்கு மாகாணத்தில் இனியும்

# தெற்கு மது வகைகளை அனுமதிப்பது சரியாகுமா?

யாழ்ப்பாணம், ஜன. 28

3 கொத்தணிகள், 19 சங்கங்கள் மற்றும்122 கிளைகளுடன் உள்ள பனை தென்னை வளச் சங்கங்களை அழிக்கத் துடிக்கும் மக்கள் தென்னிலங்கையில் இருந்து வரும் மதுபானவிற்பனைநிலையங்களை மட்டும் அனுமதிப்பது எந்த வகையில் நியாயம்? என்று யாழ்ப்பாண பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கம் கேள்வி எழுப்புகின்றது.

1995 ஆண்டு வரையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 216 கிளைகள் காணப்பட்டன. இன்று தெல்லிப்பழையில் 4 கிளைகள், யாழ்ப்பாணத்தில் 3 கிளைகள், கோண்டாவிலில் 4 கிளைகள், கொடிகாமத்தில் 13 கிளைகள், சாவகச்சேரியில் 14 கிளைகள், அச்சுவேலியில் 11 கிளைகள் காணப்படுகின்றன.

சுன்னாகம் சங்கத்தின் கீழ் 14 கிளைகள், சங்கானையில் 11 கிளைகள், காணப்படுகின்றன. பண்டத்தரிப்பு, ஊர்காவற்றுறை, வேலணை சங்கங்களுமாக 122 கள்ளுத் தவறணைகள் மட்டுமே காணப்படுகின்றன.

இவற்றில் 3 ஆயிரத்து 540 அங்கத்தவர்கள் உள்ளனர். இவர்கள் நாளாந்தம் சராசரியாக ஒரு இலட்சம் போத்தல் கள் உற்பத்தி செய்கின்றனர்.

இவற்றைச் சந்தைப்படுத்துவதில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றோம் என்று மாவட்டத் தலைவர் வ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இந்த மாதமே பல சங்கங்கள் கள் விற்க முடியாமல் நிலத்தில் ஊற்றும் நிலை நீடிக்கின்றது. கள் கொள் விலை 100 ரூபா. விற்பனை விலை 120 ரூபாவாகவுள்ளது. போத்தலில் அடைத்தால் மதுவரித் திணைக்களத்துக்கான வரி 37 ரூபா செலுத்த வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றி யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளர் சந்திரகுமார் வனிதாவிடம் கேட்டபோது, “இந்த ஆண்டின் முதல் 24 நாளிலும் 3 ஆயிரம் போத்தல் கள் நிலத்திலே ஊற்றப்பட்டது. பொம்மைவெளிக் கிளை 2004இல் காணி வேண்டிக் கட்டடம் கட்டப்பட்டது. அங்கே 2 காவலாளிகள் உள்ளனர். 13 கமராக்கள் உள்ளன.

இவ்வாறான கிளைகளில் விற்பனை அனுமதிக்கப்படாத காரணங்களாலேயே தொழிலாளர்கள் இரகசியமாக வீடுகளில் விற்பனை செய்ய முயற்சிக்கின்றனர். என்று தெரிவித்தார். (கு)

ஐ.நாவில்

# இலங்கை விவகாரம் இரண்டு அறிக்கைகள்

கொழும்பு, ஜன. 28

**ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 43 ஆவது கூட்டத் தொடர் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 20ஆம் திகதிவரை நடைபெறவுள்ள நிலையில் இந்தக்கூட்டத் தொடரில் இரண்டு முக்கிய அறிக்கைகள் வெளியிடப்படவுள்ளன.**

43ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான அவதானிப்பு அறிக்கையை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லட் முன்வைக்கவுள்ள நிலையில் இலங்கைக்கு கடந்த வருடம் பயணம் மேற்கொண்ட சுதந்திரம் மற்றும் மத நம்பிக்கை தொடர்பான சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கையும் வெளியிடப்படவுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் பின்னடைவுகள் தொடர்பாக மனித உரிமை ஆணையாளர் பரிந்துரைகளை முன்வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அரச தூதுக்குழு இம்முறை ஜெனிவா மனித உரிமை கூட்டத் தொடரில் பல்வேறு தரப்பினர் பங்கேற்கவுள்ளனர். இலங்கை அரசின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் அல்லது மனித உரிமை தொடர்பான அமைச்சர் தலைமையிலான உயர்மட்ட தூதுக்குழுவினர் ஜெனிவா கூட்டத் தொடரில் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கைத் தூதுக்குழுவினர் ஜெனிவாவில் மனித உரிமை ஆணையாளரையும் சந்தித்து பேச்சு நடத்த எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச நாடுகளின் தூதுவர்களையும் அரச தரப்பினர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இதேவேளைதமிழ்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்றக் குழுவொன்றும் சட்டத்தரணிகளும் இம்முறை ஜெனிவாக் கூட்டத் தொடரில் பங்கேற்கவுள்ளதுடன்பொறுப்புக்கூறல்தொடர்பில் அழுத்தங்களை பிரயோகிப்பர் எனத்தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

## சகோதரியை கொலை செய்த சகோதரன்

மது போதையில் தனது சகோதரியை கொலை செய்த இலங்கையரை கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆர்.தரகேஸ்வரி என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது தாய் மற்றும் மகனுடன் சென்னை வலசர்வாக்கத்தில் வாடகை வீட்டில் தங்கியிருந்துள்ளார். அங்குள்ள புகைப்பட கலையகத்தில் பணியாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன்னர், இலங்கையில் வசிக்கும் பெண்ணின் சகோதரர் குகதர்சன் சென்னைக்குச் சென்றுள்ளார். சபரிமலைக்கு யாத்திரை மேற்கொள்ளும் நோக்கில் அவர் இந்தியா சென்றுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை யாத்திரை முடிந்து சென்னையில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு சென்றுள்ளார். அங்கு மது அருந்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த அவர், தனது சகோதரியுடன் இடம்பெற்ற வாக்குவாதத்தில் அவரைக் கத்தியால் குத்தி கொலை செய்துள்ளார்.

தனது தாய் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளார் எனப்பொலிஸாரின்விசாரணையில்தெரியவந்துள்ளது. இந்நிலையில், சந்தேக நபர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ஒ.5)

## பொங்கல் விழா

சாவகச்சேரி.ஜன.28

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை பாவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் பொங்கல் விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நிலையத்தில் நடைபெறும்.

தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் வளாகத்தில் நெல் விதைப்பு, களை பிடுங்கல், இருபாலரும் இணைந்து நெல் அறுவடை, சூடு மிதிப்பது, நெல் குற்றிப் பொங்கலிடும் நிகழ்வுகள் நடைபெறும். (க-9)

## தமிழர் மனங்களை வெல்ல சிவிலில் படை வரக்கூடாது

*வரதராஜப்பெருமாள் கூறுகின்றார்*

வவுனியா, ஜன. 28



தமிழ் மக்களுடைய மனங்களை வெல்வதற்கு முயற்சிப்பதாக இருந்தால், இராணுவ அதிகாரிகளை சிவில் நிர்வாகங்களிலோ அல்லது மக்களோடு நேரடியாகத் தொடர்புடைய விடயங்களிலோ நியமிப்பதைத் தவிர்த்துக் கொள்வது மிகநல்ல விடயம் என்று முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் ஆதரவாளர்களிடையே வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பலரும் நினைப்பது போல கடந்த ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் எடுத்துக்கொண்ட நிலைப்பாட்டைத்தான் நாடாளுமன்றத் தேர்தலிலும் எடுப்போம். தமிழ் மக்களுடைய உரிமைகள் தொடர்பாகவும் விடாப்பிடியாக குரல் எழுப்புவோம். முற்போக்கான சக்திகளெல்லாம் இணைந்து செயற்பட வேண்டும் என்று விரும்புகிறோம். இராணுவ அதிகாரிகளை நிர்வாகங்களில் போடுவதால் தமிழ் மக்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்படுவது என்பது நியாயமானது தான்.

அரசை பொறுத்தவரையில் இராணுவ அதிகாரிகள் மிகச்சிறந்த நிர்வாகிகள். ஏனென்றால் ஆயிரக்கணக்கானவர்களைக் கட்டிமேய்த்தவர்கள். அவர்கள் நிர்வாகத் திறமை கொண்டவர் என்று அரசு கருதுகிறது - என்றார். (த-110)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்: கோத்தாபய தெளிவுபடுத்தி அறிக்கை

கொழும்பு, ஜன. 28

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தேவையான, உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர், இறப்புச் சான்றிதழ் வழங்கப்படும் என்றே ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான மூத்த அதிகாரி ஹன்னா சிங்கரிடம் தான் கூறினார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எத்தனைபேர் என்பது குறித்து, தாங்கள் இருவரும் பேசிக் கொள்ளவில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபயவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங்கர்க்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த 17ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. இதன்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து மேலதிக தெளிவை வழங்கும் பொருட்டு, ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று பட்டியலிடப்பட்டுள்ள 20 ஆயிரம் பேரும் உயிரிழந்துவிட்டனர் என ஹானா சிங்கரிடம் தான் தெரிவித்ததாக சில சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அந்தச் செய்திகள் அனைத்திலும் இறப்பு சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்னதாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று ஹன்னா சிங்கரிடம் தான் தெரிவித்த மிக முக்கியமான விடயம், வேண்டுமென்றோ அல்லது தற்செயலாகவோ தவிர்க்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

'நானோ அல்லது சிங்கர் அம்மையாரோ, எத்தனை பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்ற எண்ணிக்கை தொடர்பாக பேசிக்கொள்ளவில்லை என்பதே உண்மை. இந்த விடயமானது, பொதுவாகவும் மேலோட்டமாகவுமே கலந்துரையாடப்பட்டதே அல்லாமல், அது தொடர்பாக குறிப்பான விவரங்கள் எதுவும் பேசப்படவில்லை. மிகவும் துரதிர்ஷ்டவசமாக 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவரும் உயிரிழந்து விட்டனர் என நான் ஒப்புக்கொண்டதாகவும், தவறாக அர்த்தப்படுத்தி அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. ஆனால், நான் அவ்வாறு ஒப்புக்கொள்ளவில்லை. எத்தனை பேர் காணாமல் ஆக்கப்பட்டனர் அல்லது உயிரிழந்து விட்டனர் என்ற எண்ணிக்கை தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை' என்றுள்ளது.

இனங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் அமைதியையும் கட்டியெழுப்புவதற்கு எம்மிடமிருக்கும் வேலைத்திட்டம் என்னவென சிங்கர் அம்மையார் அறிய விரும்பிய போது, பொருளாதார அபிவிருத்தி, தமிழ் மக்களையும் பொலிஸில் சேர்ப்பது என்பவற்றுடன், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கும் தீர்வைக்காணநான் முயற்சிக்கவிருக்கிறேன் என அவரிடம்நான் விளக்கினேன்.

போரில் உயிரிழந்த ஏராளமானோரின் உடல்கள் மீட்கப்படவில்லை என்பதனால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை என்னவென்று அவர்களது குடும்பத்தினர் தெரியாது இருக்கின்றனர். அதேவேளையில் இந்தக் குடும்பங்களில் பெரும்பாலானவர்கள், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் விடுதலைப் புலிகளால் ஆள் சேர்ப்பு செய்யப்பட்டதன் சாட்சிகளாகவும் இருக்கின்றனர் என்று சிங்கர் அம்மையாருக்கு நான் விளக்கினேன்.

எனவே, தேவையான, உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர், இறப்புச் சான்றிதழ் வழங்கப்படுவதுடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் தமது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பத் தேவையான உதவிகளையும் வழங்க நாம் நடவடிக்கை எடுப்போம் என, ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங்கர்டம் நான் தெளிவுபடுத்தினேன், என்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஒ.5)

**வாடகைக்கு**

நல்லூரில் தனி அறை, இணைந்த குளியலறை, சிறிய சமையலறை, ஹோல் உடன் அனெக்ஸ் பெண்களுக்கு மட்டும் வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 070 287 7082

# தங்கத் தூண்டில்

வசந்த், சுந்தர் இருவரும் அண்ணன் தம்பிகள். மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம், அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.



அவர்களிடம் அவன், ""சாப்பிட்டுப் பல நாள்கள் ஆகின்றன. ஏதேனும் உணவு தாருங்கள்!" என்று கெஞ்சினான். இரக்கப்பட்ட வசந்த் அவனுக்கு உணவு தந்தான்.

இதைப் பார்த்த சுந்தர், ""அண்ணா! இப்படிப்பட்ட சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டக்கூடாது!" என்று எரிச்சலுடன் சொன்னான். அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அங்கே வந்தான். அவனுக்கு வசந்த் உணவு தந்தான். மீண்டும் இவன் இங்கே வந்து பிச்சை எடுக்கிறானே என்று கோபம் கொண்டான் சுந்தர். ""சோம்பேறிப் பயலே! அடுத்த முறை உன்னை இங்கே பார்த்தால் தொலைத்து விடுவேன்!" என்று கத்தினான் சுந்தர்.

மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அங்கே வந்தான் அவன். கோபத்தால் துடித்த சுந்தர் அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான். அவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஏரிக்கரைக்கு வந்தான்.

""இப்படிப் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்துகிறாயே? உனக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தருகிறேன். இந்தத் தூண்டிலை வைத்துப் பிழைத்துக் கொள்!" என்றான். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றான். அதன் பிறகு அந்தப் பிச்சைக்காரன் அவர்கள் வீட்டிற்கு வருவதே இல்லை.

பல ஆண்டுகள் சென்றன. செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அங்கே வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. வசந்த்தும், சுந்தரும் அவரைப் பார்த்தனர். தங்கத் தூண்டிலை சுந்தரிடம் தந்தார் அவர். ""என் அன்புப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள்!" என்றார்.

தன் வீட்டிற்கு வந்த பிச்சைக்காரன்தான் அவன் என்பது வசந்த்துக்கு தெரிந்தது.

கோபத்தால் துடித்த அவன், ""நீ சாகப் பிழைக்க இங்கே வந்தாய். உனக்கு உணவு தந்துக் காப்பாற்றியவன் நான். எனக்குத்தான் இந்தத் தங்கத் தூண்டில் உரியது. என்னிடம் தா!" என்று கத்தினான். ஆனால், அவரோ, ""இது உங்கள் தம்பிக்குத்தான் உரியது!" என்று உறுதியாகச் சொன்னார். இதை வசந்த் ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கை நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றான். நடந்ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி. வசந்த்தைப் பார்த்து அவர், ""நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மைதான். நீ செய்த உதவி இவர் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழி காட்டினார். அதைப் பயன் படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்தார். நிலையான உதவி செய்த சுந்தருக்கு இவர் தூண்டிலைப் பரிசு அளித்தது சரியே. இந்தத் தங்கத் தூண்டில் சுந்தருக்கே உரியது. இதுவே என் தீர்ப்பு!" என்றார்.

## பொது அறிவு

1. நாக்கின் அடிப்பாகம் உணரும் சுவை எது?
   கசப்பு
2. ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன?
   ஏழு
3. உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
   நெதர்லாந்து
4. கண்கள் இருந்தும் பார்வையில்லாத பிராணி?
   வெளவால்
5. தன் வாழ்நாளில் நீரே அருந்தாத மிருகம் எது?
   கங்காரு எலி
6. மின்தடையை கண்டுபிடித்தவர் யார் ?
   ஓம்
7. விண்வெளியில் வைரம் தயாரித்த முதல் நாடு எது ?
   ஜப்பான்
8. பாம்புகளே இல்லாத கடல் எது ?
   அட்லாண்டிக் கடல்
9. பென்சில் தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள்கள் எவை ?
   காரியம் , களிமண், மரக்கூழ்

"Soft skills are responsible for 85% of job success" Harvard University

iLEAPclub

"Employees with soft skills are key to success" LinkedIn VP

LEARN. ENGAGE. ACHIEVE. PROGRESS.

**Soft Skills (மென்திறன்கள்) and Leadership (தலைமைத்துவம்) Children & Youth Program**

**Proven Canadian Soft Skills Program. Now here in Jaffna at IIS City Campus!**
**Free Demo for Children! Workshop for Professionals! Training for Business Opportunities.**

**Register NOW at IIS City Campus 021-222-8060/071-777-4111(Kamal)** 200 Sivanpannai Road, Jaffna.

**Senior Level**
(Grade 10 and below)
FREE Demo
Wednesday, Jan 29
2:30 PM to 4:30 PM

**Advanced Level**
(Grade 11, 12, University)
FREE Demo
Thursday, Jan 30
2:30 PM to 4:30 PM

**Business opportunity**
Become an iLEAPclub Facilitator
1 Day training
Qualifications: Fluent in English and a professional background
Friday, Jan 31
9:00 AM to 5:00 PM

**Soft Skills & Leadership**
(Professionals, A/L & university students)
1 Day Workshop
Saturday, Feb 1
9:00 PM to 5:00 PM
*Normally LKR 10,000 now 6,000*

**How the iLEAP Club Program can help your Child:**
- Discover their inner leader.
- Boost self-confidence and self-respect.
- Improve their academic success.
- Build a solid foundation for a bright future.
- Boost their focus and mental acuity.
- Stand out from the crowd.

**Your child will learn Over 112 Soft Skills:**
- Creative Thinking
- Critical Thinking
- Problem Solving
- Conflict Resolution
- Interpersonal Skills
- Negotiation Skills
- Emotional Intelligence Skills
- Job Interview Skills
- Professional Promotions
- Presenting Yourself
- Leadership Skills
- Communication Skills
- Public Speaking Skills
- Presentation Skills,......

iLEAP Club பயிற்சி மூலம் English இல் பேசப் பழக, English இல் எழுதப் பழக, English இலக்கணங்களை, பிழைகளை அறிந்து கொள்ளல் எனப் பல தளங்களை இந்த Program நிறைவு செய்கின்றது.

21ஆம் நூற்றாண்டின் மிகவும் தேவையான திறன்கள்
**Building 21st Century Skills! Braving 21st Century Challenges!**
www.ileaclub.org
info@ileapclub.org

IIS CITY CAMPUS

**தென்னம்பிள்ளை விற்பனை**

நல்லின ஊர்த் தென்னம் பிள்ளைகள் விற்பனைக்குண்டு.

**071 858 4886**

**வேலையாள் தேவை**

ஆடை உற்பத்தி தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளை விநியோகம் செய்ய **விநியோகஸ்தர் தேவை.**

விற்பனை திறமை/ பேச்சாற்றல் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 470 1495

**வேலையாள்கள் தேவை**

திருநெல்வேலி. சுன்னாகம்.
வசாவிளான். கைதடி ஆகிய இடங்களில்
உள்ள **Hotel,** விவசாயபண்ணை
போன்றவற்றுக்கு

- பிரதான பாதுகாப்பு அதிகாரி **(OIC)**
  ( ஒரு Shift இற்கு 1050/=)
- பாதுகாப்பு ஊழியர் **(JSO)**
  ( ஒரு Shift இற்கு 950/=)
- பெண்பாதுகாப்பு ஊழியர் **(LSO)**
  ( ஒரு Shift இற்கு 950/=)

வேலையாள்கள் தேவை.

**077 433 1841, 076 810 2975**

**அரசாங்க அறிவித்தல்**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்**

**ஒப்பந்தகாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால நீடிப்பு**

31.10.2019 ம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2020ம் ஆண்டிற்கான ஒப்பந்தகாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் சம்பந்தமான அறிவித்தலிற்குரிய பதிவுக்கான இறுதித் திகதி 29.02.2020ம் திகதி வரை காலநீடிப்புச் செய்யப் பட்டுள்ளது.

நா.வேதநாயகன்
மாவட்ட செயலாளர். மாவட்ட செயலகம்.
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவுகள்

**அமரர் அன்னம்மா ஆறுமுகம் (மணியம்மா)**



தோற்றம்
27.04.1943

மறைவு
29.12.2019


ஆண்டவன் அடிசேர்ந்து மாதம் ஒன்று ஆனதுவோ!
ஆனாலும் நம்பமுடியவில்லை உங்கள் மறைவை
தினமும் எங்கள் வரவைப் பார்த்தபடி காத்திருக்கும்
உங்கள் முகம் காணாது தவிக்கின்றோம் - அம்மா

வாதையடி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**திருமதி சரஸ்வதிதேவி (கஸ்தூரி) தர்மலிங்கம்**



ஆதிமயிலிட்டியை பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி தேவி (கஸ்தூரி) தர்மலிங்கம் நேற்று **(27.01.2020)** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ராசா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சுப்பிரமணியம் நன்னிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான குணாளன், குமணன் மற்றும் மகிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான ராஜகோபால், சீதாதேவி, ருக்குமணிதேவி மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சரஸ்வதி, சிவபாக்கியம் மற்றும் மகேஸ்வரி காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் ஞானேஸ்வரி காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் கஜந்தினியின் பாசமிகு மாமியாரும், தேஜஷ், அம்றிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று **(28.01.2020)** செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலிட்டி கொட்டுப்பள்ளம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அரசடி"
நெசவுசாலை வீதி, மாவிட்டபுரம்

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 076 696 7522

# தேரர் மீது நடந்த சூடு எதிர்பாராத சம்பவம்

## பதில் பொலிஸ் மா அதிபர் ஆணைக்குழுவுக்கு தெரிவிப்பு

கொழும்பு, ஜன.28

ஹுங்கம தெனிய பிரதேசத்தில் கடந்த 21 ஆம் திகதி துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி தேரரொருவர் ஒருவர் உயிரிழந்தமை தவறுதலாக துப்பாக்கி இயங்கியமையால் ஏற்பட்ட எதிர்பாராத சம்பவம் என்று பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன அறிவித்துள்ளார் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக் குழு, பதில் பொலிஸ்மா அதிபரிடமிருந்து அறிக்கையைக் கோரியிருந்தது. அதற்கமைய தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் நிறைவேற்று குழு கூடிய போது பதில் பொலிஸ்மா அதிபர் இது தொடர்பில் தெளிவுபடுத்தியதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

ஹுங்கம ஹாதாகல தெனிய வீதியில் கடந்த 19 ஆம் திகதி ஹெரோயின் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேக நபரை விரட்டி சென்று கைது செய்ய முற்பட்ட போது ஏற்பட்ட கைகலப்பிலேயே தவறுதலாக துப்பாக்கி வெடித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் அதிகாரி ஒருவர் சந்தேகநபரைக் கைது செய்ய முயன்றபோது அவரது துப்பாக்கி இயங்கி, அருகில் நின்று கொண்டிருந்த வேனில் அமர்ந்திருந்த ஹுங்கம ஹாதகல பூராண ரஜமஹா விகாரையின் தேரர் உனவட்டுன சீலரதன தேரர் துப்பாக்கிக் குண்டு பட்டுக் கடந்த 21ஆம் திகதி உயிரிழந்தார். (எ)

# பிரியாவிடை நிகழ்வில் சந்தித்த துருவங்கள்!

கொழும்பு, ஜன.28

இலங்கைக்கான இந்தியத் தூதுவராகச் செயற்பட்ட தரண்ஜித் சிங் சந்துவின் பிரியாவிடை நிகழ்வு நேற்று திங்கட்கிழமை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, பிரதமரின் துணைவியார் ஷிராந்தி ராஜபக்ச, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட மேலும் பல அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (எ-22)







*19ஐ...*

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நாம் ஆட்சியமைத்தால் மாத்திரமே பல நெருக்கடிகளுக்குத் தீர்வு காண முடியும். பெரும்பான்மை ஆதரவுடன் பலமான அரசை நாம் தோற்றுவிக்க முடியாவிடின் ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியும் மக்களின் எதிர்பார்ப்பும் பயனற்றதாகிவிடும். மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடனான பலமான அரசை நிச்சயம் அமைக்கும்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தால் அதிகார முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அத்துடன், நடைமுறையில்உள்ளதேர்தல்முறைமைஅனைத்துமோசடிகளுக்கும் நேரடிப் பங்கு வகிக்கின்றது-என்றார். (எ-22)

*அரசியல்...*

அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாராட்சி, சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுக்கு இந்த விடயம் தொடர்பாக அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள் சில ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் ஜனநாயகத்தைத் துஸ்பிரயோகம் செய்கின்றனர். இந்தச் செயற்பாட்டை இயன்றளவில் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் உரிய அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்பதைக் கவனத்தில் கொண்டு இவ்வாறான அரசியல் கட்சிகளைப் பதிவுப் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும். மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக உடன் கவனம் செலுத்த வேண்டும் என்று அந்த அமைப்பு கோரியுள்ளது. (எ-22)

## நன்றி நவிலல்

**அமரர் திருமதி**
**காசிநாதன் ஜெகதீஸ்வரி**
**(ஓய்வுநிலை வேலணை பிரதேசசபை உத்தியோகத்தர்)**



மலர்வு
08.01.1953

உதிர்வு
27.12.2019

கடந்த (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டவர்கள் மற்றும் மரணச்செய்தி கேட்டு ஓடோடிவந்து ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், ஆறுதலும் தேற்றுதலும் கூறிய அன்புள்ளங்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும், மலரஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பர்களுக்கும் உள்நாட்டு வெளிநாட்டு உறவினர் நண்பர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு:- தவறு ஏதும் நடந்திருப்பின் அதற்காக மனம் வருந்துகின்றோம்.

3ஆம் வட்டாரம், நயினாதீவு.

**குடும்பத்தினர்.**

# VACANCY
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## Post of Librarian

University of Jaffna will entertain applications from qualified persons for the **Post of Librarian** up to **27.03.2020.**

I. **Qualifications:**

1. (i) A First or a Second Class (Upper Division) in a Special Degree; **or**
   (ii) A Second Class (Lower Division) in a Special Degree or a First or a Second Class (Upper Division) in a General Degree; **or**
   (iii) A pass in a Degree Examination and a Postgraduate Degree of at least 02 academic years duration in the field of Library and Information Sciences with a research component by way of thesis / dissertation;

**And**

2. A Master's Degree in Library & Information Science obtained after a full-time course of study of at least two academic years duration (or an equivalent part-time course of study) with a research component by way of thesis/dissertation or a Doctoral Degree;

**And**

3. Publications in the field of Library and Information Sciences.

**And**

4. At least fifteen (15) years' experience after obtaining a first degree or at least ten (10) years after obtaining the qualification at (2) above in one or both of the following:
   (i) experience in Librarianship in a recognized Library
   (ii) research in Library and Information Sciences

**And**

5. At least the minimum marks laid in the Marking Scheme for the post of Librarian
   **Note:** No credit will be given under (2) above to a postgraduate degree recognized under (1)(iii) above for appointment as Assistant Librarian.

II. **Remuneration and Other Benefits Salary scale**

Rs.117,350 – 13 x 2,700 – 152,450/-p.m
In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary:
   i) Academic allowance - 162%
   ii) Research allowance - 35% (Payable to the Academic Staff based on the research activity)
   iii) Additional monthly allowance – 20%
2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

i) Sabbatical leave entitlement
ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
iii) Gratuity payments
iv) Employees' Trust Fund benefits.
v) Free Medical Services.

III. **Method of Application**

An application for recruitment should be accompanied by;

a) the Curriculum Vitae of the Applicant
b) a self –assessment of his/her whole career specifying the contribution to:
   • Librarianship and Academic Development
   • Research and Creative Work
   • Dissemination of Knowledge and contributions to University and National Development

   as given in the Marking Scheme for the Post of Librarian
c) three copies of the publications, research papers and other relevant documents by the candidate. Other relevant documents and materials may also be submitted in three copies in a form that can be evaluated.
d) titles of five (5) outstanding research papers/publications by the candidate.

These documents shall be **sent to the Vice Chancellor** by each candidate with a covering letter applying for the position.

IV. **Method of Recruitment**

By evaluation of self assessment and interview.

V. **Application Forms and Details in General**

Application form, Scheme of Recruitment and other details will be available in the University website **www.jfn.ac.lk**. Downloaded application forms should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

Application form and other details may be obtained from the office of the **Deputy Registrar, Academic Establishments**, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application form by post are requested to send a self – addressed stamped envelope 23x10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

VI. **Closing Date**

Duly completed applications on prescribed form together with all supportive documents should reach to the Office of the Vice-Chancellor **on or before 27.03.2020.**

**Illegible & incomplete applications, applications without supportive documents & paid Bank slip and applications received by the University after the closing date will be rejected without intimation.**

**Note:** The University reserves the right to short- list the applicants and such applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA.**
**28.01.2020**

## தவறவிடப்பட்டுள்ளது

நேற்று (2020.01.27) திங்கட் கிழமை யாழ்.கன்னாதிட்டிச் சந்திக் கும் மானிப்பாய் கூழாவடிச் சந்திக்கும் இடைப்பட்ட வீதியில் கறுப்புநிற சூட்கேஸ் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**077 724 4700, 077 938 2159**

## வேலையாள்கள் தேவை

முறுகண்டியில் இயங்கும் தனியார் உணவு உற்பத்தி நிறுவனத்திற்கு **சுத்திகரிப்பாளர், பொதிசெய்பவர் ஆண், பெண்** இருபாலாரும் உடன் தேவை.

தொடர்புகளுக்கு
**077 386 6250**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முத்துலிங்கம் பிறேமாவதி



திருநெல்வேலி கிழக்கு முடமாவடியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துலிங்கம் பிறேமாவதி நேற்று (27.01.2020) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் வல்லிபுரம் முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும் சந்திராவதி (குஞ்சு), கருணாகரன் (இந்தியா), காலஞ்சென்ற நந்தகுமார் ஆகியோரின் அன்புச்சகோதரியும் பிரியதர்சினி (நோர்வே). காலஞ்சென்றவர்களான வாணிதாசன் (வவா), பிரியதாசன் மற்றும் பிருதிவிராஜ் (ஸ்ரூடியோ ராஜ்). ஆகியோரின் அன்புத்தாயாரும் குபேந்திரன் (நோர்வே), பாசமலர், மேனகா ஆகியோரின் மாமியாரும் கிருசனாவின் (தமிழ்) அப்பம்மாவும், வினோஜன், விவேகா ஆகியோரின் அம்மம்மாவும் பாக்கியம், காலஞ்சென்ற திரவியம் மற்றும் வைத்திலிங்கம் (விறுமர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவாந்தியின் மச்சாளும் சதீஸ், பிரதீஸ் ஆகியோரின் அத்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2020) செவ்வாய்க்கிழமை இல.07, வராகி அம்மன் வீதி, கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.07, வராகி அம்மன் வீதி,**
**கொக்குவில் மேற்கு.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 746 4747, 077 927 1613**

பிறப்பு
13
...
10
...
1934



இறப்பு
27
...
01
...
2020

## சுப்பிரமணியம் கணேசமூர்த்தி

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், குடமியன் வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கணேசமூர்த்தி (பொலிஸ் உத்தியோகத்தர், ஓய்வுபெற்ற P.W.D ஓவசியர்) நேற்று **(27.01.2020)** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும் வல்லிபுரம் சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஞானாம்பிகை, கமலாம்பிகை, யோகாம்பிகை, காலஞ்சென்ற குகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மீனவேணி, ஜெயவேணி, கமலவேணி, கலைவாணி, கருணாகரன், பத்மவேணி (ஆசிரியர் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி), பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரவேலு, சுத்தானந்தன், நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருத்திகன், வித்யாஷா, விதுர்ஷிகா, பிரியங்கா, அபிராமி, கேரன், அபிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை **(29.01.2020)** புதன்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பருத்தித்துறை வீதி,**
**குடமியன் வரணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தொடர்பு: 077 889 2202

# இலங்கையர் அனைவருக்கும் Video புரட்சியினை வழங்கும்

# 4G Video BLASTER

# UNLIMITED YouTube

உடன் ஏனைய சேவைகளுக்கு மேலதிகமாக 3.5GB* டேட்டா இலவசம்



## ரூ. 249/- மட்டுமே

செல்லுபடியாகும் காலம் – 30 நாட்கள், வரிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது

**4G Video Blaster இனை செயற்படுத்திக்கொள்ள,**

- உங்களுக்கு Dialog 4G SIM அட்டையுடன் (முற்கொடுப்பனவு அல்லது பிற்கொடுப்பனவு) 4G தொலைபேசி அவசியமாகும்
- MyDialog App, www.dialog.lk ஊடாக அல்லது #678# டயல் செய்து செயற்படுத்திக்கொள்ளுங்கள்
- நீங்கள் முற்கொடுப்பனவு வாடிக்கையாளராயின் ரூ. 249 ஐ ரீலோட் செய்யுங்கள்

TRC/D/PRO/19/05

4G ஸ்மார்ட்போனில் செயற்படுத்தப்பட்டுள்ள unlimited video சேவையினை SD Video தரத்தில் பார்வையிட முடியும்
Tab அல்லது பெரிய திரையினை கொண்ட சாதனங்களில் ஏனைய டேட்டா பக்கேஜ்களை செயற்படுத்திக்கொள்வதன் மூலம் HD Video தரத்தில் பார்வையிட முடியும்

twitter.com/dialoglk facebook.com/dialog.lk • நிபந்தனைகளுக்கு உட்பட்டது *Anytime, Night Time & Anytime 4G போனஸ் உள்ளடக்கப்பட்டுள்ளது

உங்களுக்கு கொண்டு வருவது
இலங்கையின் பிரபலமான
இன்டர்நெட் சேவை வழங்குனர்
ஸ்லிம் நீல்சன் மக்கள் விருது 2019

இலங்கையின் முதற்தர வலையமைப்பு

Dialog

an axiata company www.dialog.lk எதிர்காலம் இன்றே.







twitter

மெந்நிலா
@ESumathi1

வெற்றி என்பது
அறிவாளிகளுக்கு
சொந்தமானதல்ல அது
நம்பிக்கை உடையவர்களுக்கு
மட்டுமே சொந்தமானது..!!

சரண்யா Alaks
@I_Saranallu

சில பிரிவுகளையும் ஏற்றுக்
கொள்ளுங்கள் அதுவே நம்
வாழ்க்கைக்கான நிரந்தர
நிம்மதியை வழங்கும்!!

அபி™ஹரபி
@abhi_heartz

தேர்வுகளுக்கு இடம்
கொடுக்காத தேடலின் பிடியில்
கைதியாக....
ஆயிரம் உணர்வுகளை
வெளிப்படுத்திடும்
உணர்வுகளின் வெளிப்பாடே
என் #Likes

வெளிநாட்டுக்காரன் தனிமை
@Vino_twitzz

பலம் என்பது
வேறொன்றுமில்லை...
கதறி அழ ஆயிரம்
காரணங்கள் இருக்கும் போது
சிரிப்பை
தேர்ந்தெடுப்பது...!!!
#வெளிநாட்டுக்காரன்

ஹர்ஷா™
@urslvlyprince

ஆசைப்படுவதை
மறந்து விடு
ஆனால்
ஆசைப்பட்டதை
மறந்து விடாதே...!




தாய்மையைப்போற்றுவோம்....
வணங்குவோம்....



இழந்ததை நினைத்து வருந்தாதே.......!
எதை நீ இழந்தாலும் அது இன்னொரு
வடிவில் உன்னை வந்து சேரும்.....



# மனைவி என்பவள் உயிர்

தன் கணவனும், கணவரின் நண்பரும் சாப்பிட அமர்கிறார்கள்.

அடுப்பறையில் இருப்பது 12 இட்லிகள்தான் என்பதை எப்படி கணவனுக்கு தெரிவிப்பது என்று குழம்பிய நிலையிலேயே இரண்டு தட்டுகளை எடுத்து வந்து கணவனுக்கும், அவனுடைய நண்பனுக்கும் வைத்து அதில் ஆளுக்கு நாலு இட்லிய்ய வைத்தாள்.

மீதம் இருப்பது நாலு மட்டுமே என மனதுக்குள் படபடப்போடு கணக்கு வேறு போட்டுக்கொள்கிறாள்.

வைத்த வேகத்தில் நான்கு இட்லிகளையும் கணவன் வேகவேகமாக சாப்பிட்டுவிட பதற்றம் கொண்டவளாய் இரண்டு இட்லியை எடுத்து கணவனுக்கு வைப்பதற்காக குனியும் வேளையில், கணவன் சொன்னான் 'எனக்குப்போதும். நாலு இட்லிக்கு மேலேயா சாப்பிடுவது...?' என்று சொல்ல; அருகில் ரசித்து, ருசித்து இன்னும் சில இட்லிகள் சாப்பிடலாம் என எதிர்பார்த்திருந்த விருந்தாளி நண்பனுக்கோ வெடுக்கென்று ஆனது!

அந்த நேரத்தில் இவளோ 'அண்ணா உங்களுக்கு...' என கணவனின் நண்பரை நோக்கிக்கேட்க, 'போதும்... போதும்... நான் எப்போதுமே மூன்று இட்லிதான் சாப்பிடுவேன். இன்று உன் கைப்பக்குவம் நான்கு இட்லிகளை சாப்பிட்டு விட்டேனம்மா...'என்று கூறி எழுந்தான் அந்த விருந்தாளி நண்பன்.

கை கழுவச் செல்லுகையில் மனைவியை கடக்கின்றபோது 'மீதமுள்ள நான்கை நீ சாப்பிட்டுவிடு'என்று கணவன் சொல்ல, தன் இதயத்தில் மட்டுமல்ல தான் சமைத்த பாத்திரத்தில் கூட எத்தனை இட்லிகள் இருக்கின்றன என்பதை பார்க்காமலே, தன் பார்வையைக் கொண்டே கணக்கிட்டுக் கொண்டதோடு; அந்த இக்கட்டில் இருந்தும் அழகாக தன்னை காத்திட்ட தன் கணவனை நினைத்து ஆச்சரியப்பட்டு மகிழ்ந்தாள் அந்தப் பெண்!

அன்பு நன்பர்களே..

இந்தக் கதையில் நாம் பார்த்த இரு மனங்களின் புரிந்துகொள்ளுதல் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! இந்த புரிதல் இல்லாத குடும்பவாழ்வில் எவ்வளவு ஆசீர்வாதங்கள் இருந்தாலும் மகிழ்ச்சியும், திருப்தியும் இருக்கவே இருக்காது.



# அனைத்துலக என்பதன் அர்த்தம் என்ன?

உதயன் பத்திரிகையில் 'அனைத்துலக தமிழியல் ஆய்வுமநாடு' என்ற சொற்பதம் தவறானது என்று நான் எழுதியதற்கு பதிலளிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் ம.இரகுநாதன் 'எல்லாச்சொற்களும் பொருள் குறித்தனவே' என்ற தலைப்பில் 18.01.2020 அன்று உதயனில் எழுதியுள்ளார். என்னையும் ஒரு பொருட்டாக மதித்து பதிலளித்தமைக்கு பேராசிரியருக்கு முதற்கண் எனதுமனமார்ந்தநன்றிகள். நான் 'கற்றது கைம்மண்ணளவு' என்று இந்த நிமிடம் வரையும் நினைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிறுவன் அல்லது கல்லாதவன். நான் பேராசிரியரைப்போல் பெரிய படிப்புகள் எதையும் படிக்கவில்லை. ஆனால் நான் கற்றுக்கொண்ட தமிழ் அறிவின் பிரகாரம் 'அனைத்துலக' என்ற சொற்பதம் தவறானது என்றே கூறினேன், இப்போதும் கூறுகிறேன், இனியும் கூறுவேன்.

பேராசிரியர் எடுத்துக்கூறிய உதாரணங்களில் கூட ஓர் இடத்திலேனும் அனைத்து என்ற சொல்லை காணவில்லை உலகம் என்றே உள்ளது.

அத்துடன் அனைத்தும் என்ற சொல்லுக்கு ஒருங்கிணைவு என்ற விளக்கத்தையும் நான் பார்த்த அகராதிகள் ஒன்றிலும் காணவில்லை.

அனைத்தும்எல்லாம் (பக் 66 கழகத் தமிழ் அகராதி) அனைத்தும்எல்லாம், முழுமுதல் (பக் 184 மதுரைத் தமிழ்ப் பேரகராதி) அனைத்தும்எல்லாம் (பக் 107 தமிழ்ஆங்கில அகராதி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) அனைத்தும்எல்லாம் (பக் 211 வரலாற்று முறைத்தமிழ் இலக்கியப் பேரகராதி) உலகம் என்ற சொல்லுக்கு தமிழ் அகராதிகள் கூறும் விளக்கத்தைப் பார்ப்போம். உலகம் என்பது பொதுவாக அனைத்து நாடுகளையும் குறிக்கும் சொல். க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி.

உலகம் The three worlds earth, heaven, hell தமிழ்ஆங்கில அகராதி உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

உலகம் என்ற சொல்லுக்கு அதல, விதல, பாதாள, சுவர்க்கம், பரலோகம் என்றெல்லாம் தமிழ் அகராதிகளில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது விரிவஞ்சி சுருக்கமாக கூறியுள்ளேன்.

அனைத்து தமிழ் அகராதிகளிலும் பார்க்கலாம்.

உலகக்கோப்பை எனும் போதோ உலக அழகி எனும் போதோ அனைத்துலக என்ற சொல் பாவிக்கப்படுவதில்லை. அனைத்துலக என்றால் **whole world** என்று தான் ஆங்கிலத்தில் பொருள் world cup உரி என்று தான் ஆங்கிலத்தில் கூறுகின்றனர்.

2017ஆம் ஆண்டு அனைத்துலக சைவ மகாநாடு என்று பிழையாக எழுதியிருந்தால் தொடர்ந்து அதே பிழையை விட வேண்டுமா? பிழையான ஒரு விடயத்தை திரும்பத்திரும்ப சொன்னால் அது சரியாகி விடுமா?

வள்ளுவனும் கம்பனும் யாழ்ப்பாணத்தில் பிறக்கவில்லை என்பது பாலர் வகுப்பு பிள்ளைக்கும் தெரியும். வள்ளுவனும் கம்பனும் யாழ்ப்பாணத்தில் பிறந்தார்கள் என்று நானும் சொல்லவில்லை. சமகால அல்லது பதினேழாம் நூற்றாண்டுக்குப்பின் தமிழ் வளர்த்த அறிஞர்களைப்பற்றியே கூறினேன். தமிழ் பிறந்தது மதுரையிலே தமிழ் வளர்ந்தது யாழ்ப்பாணத்திலே என்று தமிழ்நாட்டு அறிஞர்கள் கூறியமையை பேராசிரியர் படிக்கவில்லையா? இதுவரை பார்க்காவிட்டால் யாழ்ப்பாண தமிழ் பற்றி எஸ்.வையாபுரிப்பிள்ளை எழுதியுள்ளதை எடுத்துப் பார்க்கவும். தஞ்சாவூர் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் யாழ்ப்பாணத்தில் பேசப்படும் தமிழ் தான் சிறந்தது என்று தெரிவித்துள்ளதாக பாடசாலை மாணவனாக இருந்த போதே நான் படித்திருக்கிறேன். பின்னாளில் பேராசிரியர் சண்முகதாஸும் அதை உறுதிப்படுத்தியுள்ளார். (அவரிடம் கேட்ட போது).

நாவலரின் கந்தபுராண பதிப்பில் பிழையா? இதுவரை நாவலரின் கந்தபுராண பதிப்பில் எவரும் பிழை கண்டு பிடித்ததாக நான் அறியவில்லை நாவலரின் கந்தபுராண பதிப்பை செம்பதிப்பு என்றே இதுவரை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நாவலரின் கந்தபுராண பதிப்பில் பிழை கண்டுபிடித்த முதலாவது ஆள் நீங்கள் தான் என நினைக்கிறேன். உங்களுக்கு ஆய்வுகள் மேற்கொள்வதற்காக வழங்கப்படும் நிதியில் ஏன் நாவலரின் கந்தபுராணபதிப்பில் உள்ள பிழைகளை சுட்டிக்காட்டி நிரூபிக்கக்கூடாது. இறுதியாக ஒன்று சொல்லலாமென நினைக்கிறேன். இதுவரை காலமும் 'உலகத் தமிழாராய்ச்சி மாநாடு' என்ற தலைப்பில் ஆய்வு செய்த அறிஞர்களுக்கு தமிழ் தெரியாது போலிருக்கிறது இனிமேலாவது 'அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு' என மகாநாட்டின் தலைப்பை மாற்றச் சொல்லுங்கள்.

ந.பரமேஸ்வரன்

# மென்திறன்களால் உங்கள் திறன்களை, திறமைகளை அதிகரியுங்கள்

வளர்ந்து வரும் தொழில்நுட்பம், மாறி வரும் வாழ்வு முறை, சமூக ஊடகங்களின் தாக்கம இவையெல்லாம் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு எங்களின் வாழ்வில் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. அவற்றின் விளைவாக, எமது எதிர்கால பிள்ளைகள், சந்ததியினரின் அறிவையும், ஆற்றல்களையும், திறமைகளையும் தேவைகளுக்கு ஏற்ற வகையிலும், மாறிவரும் சவால்களை சந்திக்கக்கூடிய வகையிலும் அமைக்க வேண்டியது கட்டாய சூழலில் நாம் இருக்கிறோம்.

21ஆம் நூற்றாண்டின் மிகவும் தேவையான திறன்கள் skills என அழைக்கப்படுவது மென்திறன்கள் என்று சொல்லப்படுகின்ற soft skills ஆகும். அமெரிக்காவின் மிகப் பிரபல்யமான பல்கலைக்கழகமான Harvard University னுடைய ஆய்வுகளின் படி, ஒருவரின் தொழில் சார்ந்த வெற்றியை 85 வீத மேல் தீர்மானிக்கின்ற சக்தியாக இந்த மென்திறன்கள் (soft Skills) அமைகின்றது.

மென்திறன்கள் (soft Skills) என்பது பல திறன்கள் சேர்ந்த. அளவுகோல் வைத்து அளக்க முடியாத, ஊர் சார்ந்த ஒரு தனி மனிதனின் வெற்றிக்கு முக்கியமானதாகக் கருதப்படுகின்ற தலைமைத்துவத் திறன், மற்றவர்களோடு சேர்ந்து பணிபுரியும் திறன், பிரச்சினைகளை கையாளும் திறன், சுமுகமாக பேசித் தீர்க்கும் திறன் எனப் பல திறன்கள் சேர்ந்த பண்புக்கூறுகளே மென்திறன்கள் soft Skills எனப்படுகின்றது.

வன் திறன்கள் Hard skills எனப்படுவது அளக்கக் கூடியது, உங்களால் வரையறுக்கக் கூடியது. உதாரணமாக உங்களுடைய degree diploma அல்லது வேறு எந்த தராதரமோ நீங்கள் வைத்திருப்பது வன் திறன்கள்.

அதாவது சொல்வார்கள் hard skills will get you an inteeview, soft skills will get you the job நீங்கள் எப்படி உங்களின் தராதரம் தவிர்த்த பண்புகளால் மற்றவர்கள் மனத்தில் இடம் பிடிக்கின்றீர்கள், மற்றவர்களோடு சேர்ந்து வேலை செய்வீர்கள் என்பதே இந்த மென்திறன்கள் soft slill கொண்டுதான் அறியப்படுகின்றது இந்த மென்திறன்கள். உங்கள் எதிர்கால தொழில் வெற்றிக்கு மட்டுமல்ல சுய வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் மிகவும் முக்கியமானது.

காலத்திற்கேட்ப, மாறி வரும் சூழலுக்கு ஏற்ப hard skills எனப்படுகின்ற வன்திறன்கள் மாறிவிடும். இன்று படிக்கின்ற progeamming language இன்னமும் ஐந்து ஆறு வருடங்களில் இல்லாமல் கூட போகலாம். அல்லது இன்னுமொன்றாய் மாறி விடலாம், ஆனால் Soft skills எனப்படுகின்ற மென்திறன்கள் வாழ் நாள் முதலீடு வாழ்க்கை தொழில் வெற்றிக்கான முன்னுரை.

மென்திறன்கள் Soft skills இல்லாத ஒவ்வொரு பிள்ளையும் தன்னால் முடிந்ததில் பாதி கூடச் சாதிக்காமல் வாழ்வைக்கழிப்பது என்பதே நியம். மேற்கத்திய நாடுகளில் Soft skills இல் முனைப்புக் காட்டத் தொடக்கி



விட்டார்கள். இதனை 21ஆம் நூற்றாண்டின் திறன் என அவர்கள் அழைக்கின்றார்கள். இது ஒரு மனிதனின் வெற்றியை தீர்மானிக்கின்ற, தொழிலாளர்களிடம் மிகவும் விரும்பி எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு மிகப்பெரிய காரணியாக பார்க்கப்படுகின்றது.

மென்திறன்கள் Soft skills நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க உதவுகின்றது, வேலை வாய்ப்புக்களை மேம்படுத்துகின்றது தனிமனிதனின் சுய மற்றும் தொழில் சார்ந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைகின்றது. மென்திறன் மிக்க மக்களால் பொருளாதாரம் முன்னேறும். நாடு முன்னேறும் வாழ்வு முன்னேறும் ஒற்றுமை ஓங்கும் பரஸ்பரம் நம்பிக்கை தோன்றும்.

இப்படி வாழ்வின் முக்கிய பங்காக அமைகின்ற மென்திறன்கள் Soft skills பாடசாலைகளிலோ வேறு எந்த இடங்களிலோ படிப்பிக்கப்படுவது இல்லை. மேலைத் தேயங்களில் இப்பொழுது இதற்கான முன்னெடுப்புகள் செய்யப்பட்டு வருகின்றது.

ஆங்கிலத்தில் சொல்வார்கள் "the best investment is the investmwnt in you childs future" அதாவது உங்களுடைய மிகச்சிறந்த முதலீடு என்பது உங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்துக்கான முதலீடுதான். பிள்ளைகளை நாளைய வாழ்வுக்கும் சவால்களுக்கும் அவர்களைத் தயாரப்படுத்துதவே இன்றைய எங்களின் முதலீடு என்பதை மறந்து விடாதீர்கள்.

instead of giving fish, teach how to fish " என்ற பழமொழி போல் தாங்களாகவே தொடக்க முயற்சிகளை எடுக்கவும் தங்களுடைய நேரங்களை தாங்களே நிர்வகிக்கக் கூடிய மாதிரியுமாக அமைக்கப்பட்டுள்ள ileap club மென்திறன்கள் Soft skills program பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு முக்கியமான படிக்கல்லாக அமைகின்றது.

எல்லோருக்குள்ளும் திறமைகள் ஒழிந்து இருக்கின்றன. அவைகளைத் தட்டி எழுப்ப வேண்டும். அதற்கான தயார்ப்படுத்தலும் சர்ந்தர்ப்பங்களும் வழங்கப்பட வேண்டும். பிழை விட்டு தவறு விட்டு திருத்திக்கொள்ள அச்சமில்லாத பாதுகாப்பான சூழல் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

அப்போது தான் பிள்ளைகள் தங்களுடைய திறமைகளை உண்மையாக வெளிக்கொண்டு வர முடியும் இதனை iLEAP Club Program பிள்ளைகளுக்கு வழங்குகின்றது.

இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பார்கள். சிறுவயதிலேயே நல்ல திறன்களைக் கற்றுக் கொடுக் க வேண்டும். சிறுவர்களாக இருக்கும் பொழுது எண்ணங்களையும் மனங்களையும் திறன்களையும் அழகாகச் செதுக்க முடியும் என்பதே ஆராச்சிகளின் முடிவு.

அந்த அடிப்படையிலேயே iLEAP Club Program வடிவமைக்கப்பட்டுள்ளது. சிறு வயதிலேயே இதனைக் கற்க தொடங்கி விட்டால், எம் பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையும், தன்னம்பிக்கை வரும், தொழிலில், படிப்பில் முன்னேற்றம் வந்து சேரும், பிள்ளைகளின் முழுத்திற னையும் கொண்டு வர உதவும்.

iLEAP Club மென்திறன்கள் (Soft Skills) Program இன்றைய சவால்களுக்கு பொருத்தமானதாக (relevant), மிகவும் திறன் உள்ளதாக, அமைக்கப்பட்டுள்ளது. சிறு வயதிலிருந்து, பெரியவர்கள் வயது வரை பயன் பெறக் கூடிய வகையில் இந்த iLEAP Club Program அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளும், கல்வித்துறைகளும் இன்னமும் இதனைப் படிப்பிக்கின்ற நிலைக்குத் தயார் இல்லை.

வன் திறன்கள் (Hard Skills) போல், இதனைப் படிப்பிப்பது கடினம்.

iLEAP Club மென்திறன்கள் Soft Skills Program படித்த ph.d பட்டம் பெற்றவர்களாலும், உயர் தொழில் நிலைகளில் வேலை செய்பவர்களாலும் உருவாக்கப்பட்டு இன்று கனடாவில் வெற்றிகரமாக பல மாநிலங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

iLEAP Club மென்திறன்கள் Soft Skills Program 112 இக்கு மேற்பட்ட மென்திறன்களின் உட்கூறுகளை உள்ளடக்கி, வேறுபட்ட வயதினருக்கும், வகுப்பினருக்கும், பல்கலைக் கழக மாணவர்களுக்கும் வெளிநாட்டுக் கல்விக்கு போகும் மாணவர்களுக்கும், வேலை வாய்ப்புக்கும் என வெவ்வேறு நிலைகளில் Junior, Senior, advaced, Facilitators நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த Program, Jaffna முதன் முதலில் பரீட்ச்சத்தமாக நடை பெற இருக்கின்றது.

இளகி இருக்கின்ற காச்சிய இரும்பு விரும்பிய படி வளைவரு போல், பிள்ளைகள் இளம் வயதில் திறன்களை ஊட்டி உருவாக்கினால், நாளைய தலைவர்களாய், வெற்றி பெற்ற மனிதர்களாய், தொழிலதிபர்களாய் வலம் வருவார்கள் என்பதில் துளியேனும் சந்தேகம் வேண்டாம்.

பிள்ளைகளுக்குள் ஒழிந்திருக்கின்ற திறமைகளை வெளிக் கொண்டு வர, பாடசாலைகளில் கற்றுக் கொடுக்காததைக் கற்றுக் கொடுக்க, பிள்ளைகள் தங்களுடைய உண்மையான மறைந்திருக்கின்ற ஆற்றல்களை வெளிக் கொண்டு வர ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களுக்கு யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக வருகின்றது iLEAP Club மென்திறன்கள் oft Skills Program.

ஒரு குறிப்பிட்ட இடங்களே இருப்பதால், முட்பதிவு செய்து கொள்ளுங்கள், தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை அறியுங்கள்

Facilitators Training பயிற்சி மூலம் நீங்கள் இந்த Program.

உங்கள் இடங்களில் பாடசாலைகளில் வேலைத்தளங்களில் பயிற்சி செய்ய முடியுமா எனப் பாருங்கள், தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை அறியுங்கள் உங்களுக்கு உங்கள் பிள்ளைகளின் சிறந்த எதிர் காலத்துக்கு இன்றே அத்திவாரமிடுங்கள். இது ஓர் அரிய சந்தர்ப்பம்.



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## “கண்ணா நீயும் நானுமா?”

மகாபாரதத்தில் துரோணர் கதாபாத்திரம் மிகத் துன்பியலானது. அவர் தன்னை விடவும், தன் பிள்ளைகளை விடவும் அதிகமாக நம்பியது பாண்டவர்களைத்தான். தன் சிஷ்யர்களான பாண்டவர்களை எவரும் முந்திவிடக்கூடாது என்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தவர். அதனால் தான் அர்ச்சுனனை விடவும், சுயமாக வில்வித்தை பயின்ற ஏகலைவனின் கட்டைவிரலை குருதட்சணை என்ற பேரில் குரூரமாக அறுக்கச் செய்தவர். அப்படிப்பட்ட குரு, குருஷேத்திரப்போரில், விதிவசத்தால் கௌரவர்களின் பக்கம் நின்று , தன் பிரியத்துக்குரிய பாண்டவர் சேனையை எதிர்த்து நிற்க வேண்டியதாயிற்று. பிறகென்ன, “கண்ணா நீயும் நானுமா?” என்ற தோரணையோடு துரோணர் களமாட இறங்கிவிட்டார். ஆனால், கடைசியில் அவர் யாரை அதிகமாக நம்பினாரோ, அதிகம் நேசித்தாரோ அதே பாண்டவர்கள் , கிருஷ்ணன் போட்ட சூழ்ச்சியை அரங்கேற்றி துரோணரைக் கொன்றார்கள்.

அதே துரோணரின் நிலையில் தான் , சுகாதார முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன வின் நிலைமை இருக்கிறது. அவர்தான் மைத்திரியை, மஹிந்தவின் கோட்டைக்குள் இருந்து இரவோடிரவாகக் கிளப்பிக் கொண்டு வந்தவர். மைத்திரி ஜனாதிபதியாகப் பதவியேற்க, ஓய்வு ஒழிச்சலின்றி களத்தில் இறங்கி வேலை செய்தவர். ஆனால் அதன் பின்னர் அதே மைத்திரியால் ஓரங்கட்டப்பட்டார் ராஜித. பின்னர் மைத்திரியை உதறி விட்டு, முற்றுமுழுதாக ஐ.தே.க ஆளாகவே மாறிவிட்டார்.

இதன் பின்னர் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் சஜித்தை ஜனாதிபதியாக்குவதற்காக தலைகீழாக நின்றார். அப்படி அவர் செய்த காரியங்களில் ஒன்று, கோத்தபாயவின் வெள்ளைவாகனச் சாரதிகள் என்று இருவரை அழைத்து வந்து , ஊடகச் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். மிகப் பரபரப்பாக அந்த ஊடகச் சந்திப்பு பேசப்பட்டது. கோத்தாபய பலரைக் கடத்தி,முதலைகளுக்கு இரையாக்கியதாகவும், நூறுக்கும் மேற்பட்ட சடலங்களை ஆற்றுக்குள் வீசி எறிந்ததாகவும் அவர்கள் ஊடகவியலாளர்களுக்கு சொன்னார்கள். இந்த வாக்குமூலங்கள் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை சிங்கள மக்களிடம் உண்டுபண்ணின. அப்போது அதிகாரம் ஐ.தே.க வசம் இருந்தது. அதனால் ராஜித நினைத்தபடி எல்லாம் செய்ய முடிந்தது.

ஆனால், அதன் பிறகு ராஜிதவின் கணக்குப் பிழைத்தது. சஜித் தோல்வியடைந்து, கோத்தாபய ஜனாதிபதியானார். இப்போது அதிகாரப் பந்து கோத்தாபயவின் கையில். பழிவாங்குவதற்குப் பேர்போன கோத்தாபய, ராஜிதவை மட்டும் சும்மா விடுவாரா என்ன? அதுவும் ஆதாரத்தோடு ராஜிதவை உள்ளே தள்ளுவதற்காக, யாரை வெள்ளைவாகனச் சாரதிகள் என்று ஊடகவியலாளர்களுக்கு ராஜித சாட்சி சொல்லவைத்தாரோ, அதே ஆள்களை புலனாய்வுப்பிரிவு வலைவிரித்துப் பிடித்தது. அவர்கள் தம்மை ராஜித பொய்ச் சாட்சி சொல்லவைத்ததாக , தடாலடியாக கட்சி தாவினார்கள். முன்னர் எப்படி மைத்திரி ராஜிதவின் பக்கம் இருந்துவிட்டு, எதிர்ப்பக்கம் பாய்ந்தாரோ,அதேபோன்று இப்போது ராஜிதவின் கையாட்களாக இருந்தவர்கள் இப்போது கோத்தாபயவின் செல்லப்பிள்ளைகளாக மாறிவிட்டனர்.

போதாக்குறைக்கு “ வெள்ளை வாகனம் குறித்த ஊடகச் சந்திப்பின் இரகசியங்களைப் பகிரங்கப்படுத்த வேண்டாம் என ராஜித சேனரத்ன தரப்பினர் எம்மை மிரட்டுகிறார்கள். உண்மைகளை வெளியே சொன்னால் கொன்றுவிடுவதாகவும் கூறுகிறார்கள்” என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு வேறு செய்திருக்கிறார்கள்.

பாவம் ராஜித, பாலூட்டி வளர்த்த கிளிகள் இப்போது அவருக்கு எதிராகவே கச்சேரி நடத்தத் தொடங்கிவிட்டன. அவரும் வழக்கம்) போல “ கண்ணா நீயும் நானுமா?” என்று தன் முன்னாள் கூட்டாளிகளைப் பார்த்துப் புலம்ப வேண்டியதுதான்.

# மஹிந்தவை முன்னிறுத்தியே தேர்தலில் களமிறங்குவோம்

## பீரிஸ் திட்டவட்டம்



கொழும்பு, ஜன. 28

நாட்டில் அடுத்து நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார் என்று பொதுமக்கள் முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளைஎதிர்வரும்பொதுத் தேர்தலுக்காக அனைத்து கட்சிகளும் தயாராகி வருகின்றமையை அந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களின் வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது.

பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், எதிர்வரும் பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறுவதன் ஊடாகவே ஒரு முழுமையான அரசை அமைக்க முடியுமென தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையிலேயே மஹிந்த ராஜபக்ஷ குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுவார் என்று ஜி.எல்.பீரிஸ்தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## நானாட்டான் பிரதேச சபைக்கு முருங்கனில் உப அலுவலகம்



மன்னார்,ஜன.28

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 12 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட, நானாட்டான் பிரதேச சபையின் முருங்கன் உப அலுவலகம் நேற்றுத் திறக்கப்பட்டது.

நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி தலைமையில், வட மாகாணப் பிரதம செயலாளர் ஏ.பத்திநாதனின் பங்குபற்றுதலுடன், வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

நிகழ்வின் இறுதியில் ஞாபகார்த்தமாக மரக்கன்றை ஆளுநர் நடுகை செய்தார். (க-60,213)

## வீட்டால் சம்பந்தனுக்கு மீண்டும் தலையிடி

கொழும்பு, ஜன. 28

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு உத்தியோகபூர்வ இல்லத்தை வழங்குவதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் பொது நிர்வாக அமைச்சர் இந்த விவகாரத்தில் விளக்கம் கோரியமையால் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் முன்னாள் பிரதமர்களுக்கும் இதேபோன்ற வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியமையைத் தொடர்ந்து பொது நிர்வாக அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இது குறித்து விளக்கம் கோரியுள்ளார் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஆனால் இரா.சம்பந்தனுக்கு உத்தியோகபூர்வ இல்லத்தை வழங்குவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்றுசபை முதல்வர் தினேஷ் குணவர்தன கடந்த நாடாளுமன்ற அமர்வின்போது தெரிவித்திருந்தார்.

சம்பந்தனுக்கு வீட்டை ஒதுக்கியதன் விளைவாக, தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஒரு வீட்டை ஒதுக்குவ்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று பொது நிர்வாக அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எதிர்க்கட்சித் தலைவராக இல்லாவிட்டாலும் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் உத்தியோகபூர்வ இல்லத்தைப் பயப்படுத்திக் கொண்டிருந்தார். தொடர்ந்து அந்த இல்லத்தை மீண்டும் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## சம்பளத்துடன் இணைத்து வாழ்க்கைச் செலவுப்படி!

*கூட்டுறவாளர்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம்.ஜன.28

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் வாழ்க்கை செலவுப் படிக் கொடுப்பனவை அந்தந்த மாதங்களில், சம்பளத்துடன் இணைத்து வழங்குவதற்கு சங்கங்கள் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் மாதாந்தத்தில் கூடுதலான வருமானம் ஈட்டும் பட்சத்தில், பணியாளர்களுக்கு வாழ்க்கைச்செலவுப்படியாக ஏழாயிரத்து 800 ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. இலாபம் ஈட்டினால் மட்டுமே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

சங்கங்கள் வருமானத்தை கணக்கிட்டு. அடுத்த மாதச் சம்பளத்துடன் கொடுப்பனவைச் சேர்த்து வழங்க வேண்டும்.

கொடுப்பனவை வழங்குவதற்குக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் சங்கங்கள் முன்கூட்டியே அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக மாதாந்தம் குறைந்த சம்பளக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் ப்ணித் தொகுதியினருக்கு, வாழ்க்கை செலவுப் படியை சம்பளத்துடன் சேர்த்து வழங்குவதற்கு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அநேகமான சங்கங்களில் வாழ்க்கை செலவுக் கொடுப்பனவு வழங்கலில் தாமதம் ஏற்படுகின்றன. சில கூட்டுறவுச் சங்கங்கள் மாத வருமானத்துக்கு ஏற்ப சங்கங்கள் இலாபம் அடையும் பட்சத்தில் கொடுப்பனவைப் பகுதியாகவும் வழங்கி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (க-17)

# பேசிப்பேசி என்னதான் பயன்!



சேரலாதன்

கூட்டமைப்பினருடன் பேசுவதற்கு ஜனாதிபதி கோத்தாபய இணக்கம் தெரிவித்துள்ளதுள்ளார் எனத் தகவல் கசிந்துள்ளது. பொதுமக்கள் முன்னணியின் தமிழ்க் கட்சிகளின் இணைப்பாளரும், முன்னாள் அமைச்சரும், வடமேல் மாகாண ஆளுநராகப் பதவி வகிப்பவரும், லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண இதைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### திஸ்ஸ யார்?

திஸ்ஸ விதாரண மஹிந்த தரப்பினருடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வருகின்றார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபயவின் வெற்றிக்கு அவர் கடுமையாக உழைத்தார். இதன் காரணமாகவே திஸ்ஸவுக்கு ஆளுநர் பதவியை கோத்தாபய வழங்கினார். இவரைப் போன்றே கோத்தாவின் வெற்றிக்காகப் பாடுபட்ட பலருக்கு ஆளுநர் பதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். கூட்டமைப்பு கடந்த நல்லாட்சி அரசுடன் நீண்ட காலமாகவே பேச்சில் ஈடுபட்டிருந்தது.

ஆனால் அதன் மூலமாக பயன் எதுவுமே கிடைக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு இந்த விடயத்தில் கூட்டமைப்பை மட்டுமல்லாது ஒட்டுமொத்தத் தமிழர்களையும் ஏமாற்றிவிட்டது என்றுதான் கூறவேண்டும்.

சிங்கள அரசியல்வாதிகளின் தயவை நாட வேண்டியதொரு அவல நிலைக்குள் தமிழர்கள் தள்ளப்பட்டமை அவர்களது சட்டக் கௌரவத்தைப் பாதிக்கக் கூடியது. ஆனால் இதைத் தவிர்க்க முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். தற்போது மஹிந்த ராஜபக்ச 13 பிளஸ் தமிழர்களுக்கு வழங்கப்படும் என்கிறார்.

கோத்தாபய 13இனை இல்லாமல் செய்ய வேண்டும் என்கிறார். இவ்வாறானதொரு நிலையில் தமிழர்கள் யாரைத்தான் நம்புவது?

### இனவாத வாக்குகள்

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் ஆதரவு சஜித்துக்கு வழங்கப்பட்டதால் ஆத்திரமடைந்த சிங்கள இனவாதிகளும், கடும் கோட்பாட்டாளர்களும் கோத்தாபயவுக்கே தமது வாக்குகளை அமோகமாக அளித்தனர். கொள்கை ரீதியாக சஜித்துடன் நின்றவர்களும் தமது மனங்களை.மாற்றிக் கொண்டனர். இனவாதம் அவர்களது மனங்களை முற்று முழுதாகவே மாற்றி விட்டது. இதன் காரணமாக சஜித் தோல்வியைத் தழுவ வேண்டிய நிலை உருவானது. கோத்தாபய சுமார் 15 இலட்சம் வாக்குகளால் சஜித்தை வீழ்த்த முடிந்தது. இந்தத் தேர்தலிலும் தமிழர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.



இனிமேல் கோத்தாபயவையும், மஹிந்தவையும் அரவணைத்துச் செல்ல வேண்டியதொரு கட்டாய நிலைக்குள் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் கோத்தபாயவுக்கு வாக்களிக்காததால் ராஜபக்ஷ தரப்பு இயல்பாகவே தமிழர்கள் மீது ஆத்திரம் கொண்டிருப்பதை உணர முடிகின்றது. இதை நீக்குவதற்குத் தமிழர் தலைமை என்ன செய்யப் போகின்றது? இது புரியாத புதிராகவே காணப்படுகின்றது. தற்போதைய நிலையில் தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் என்ற அந்தஸ்து கூட்டமைப்புக்கே உள்ளது.

இதன் காரணமாகவே தமிழர்களின் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அவை தொடர்பாகப் பேசவேண்டிய கடப்பாட்டையும் அது கொண்டுள்ளது. இதனால் கூட்டமைப்புக்கு விரோதமான சக்திகள் எதற்கெடுத்தாலும் கூட்டுறவைக் குறை கூறுகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றன.

தற்போது கூட்டமைப்பின் தலைமையில் மாற்றம் ஏற்பட்டால் கொள்கை ரீதியாக அதனுடன் இணைந்து பயணிக்க முடியுமென முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரான விக்னேஸ்வரன் அறிவிப்பு ஒன்றை வெளி யிட்டுள்ளார்.

விக்னேஸ்வரனின் இந்தக் கருத்தை கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளுமா என்பது சந்தேகத்துக்குரியது.

கூட்டமைப்பில் இருந்து கொண்டே அதற்கு எதிராகச் செயற்பட்டவர்தான் இந்த விக்னேஸ்வரன்.

அதுமட்டுமல்லாது தனிக் கட்சியொன்றை ஆரம்பித்துக் கூட்டமைப்புக்கு எதிரானவர்களை அதில் இணைத்துக் கொண்டவர். மேலும் கூட்டமைப்புடன் விரோதத்தை வளர்த்துக் கொண்டு அதிலிருந்து வெளியேறிய வெளியேற்றப்பட்ட சுரேஸ் பிரேமச்சந்திரன், அனந்தி சசிதரன், ஸ்ரீகாந்தா போன்றவர்களைத் தனது பங்காளிகளாக இணைத்துக் கொண்டவரும் இந்த விக்னேஸ்வரன்தான். இவர் தேவையான வேளைகளில் ஒவ்வாதக் கருத்துக்களை உதிர்ப்பதற்கும் தவறுவதில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக மாற்றுத் தலைமை தொடர்பாகப் பேசி வந்தவரும் இவர்தான்.

தற்போது கூட்டமைப்பின் தலைமை மாற்றப்பட வேண்டும் என்கிறார். அவ்வாறாயின் தாமே மாற்றுத் தலைமையாக வந்தாலென்ன என்ற எண்ணமும் அவரது உள் மனதில் எழுந்திருக்கக் கூடும்.

ஆனால் அரச தலைவர்களைப் பொறுத்தவரையில் விக்னேஸ்வரனை ஓர் இனவாதியாகவே எடை போட்டுள்ளனர்.

அவ்வாறாயின் அவரை மதித்துப் பேசுவதற்கு அவர்கள் முன்வருவார்களா என்பது சந்தேகமானதாகவே காணப்படுகின்றது.

### பேசிப் பயனில்லை

தமிழ்த் தலைவர்களின் எவராலுமே சிங்கள ஆட்சியாளர்களுடன் பேசி எதையுமே சாதித்துவிட முடியாது. ஏனென்றால் ஆட்சியாளர்கள் பெரும்பான்மையின மக்களைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே செயற்பட விரும்புகின்றனர்.

ஏனென்றால் ஆட்சியில் நீடிக்க வேண்டுமென்றால் பெரும்பான்மையினரின் ஆதரவுதான் அவர்களுக்குத் தேவைப்படும். நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இதுதான் நடந்தது.

ஆகவே பேச்சு என்ற பேரில் மீண்டுமொரு தடவை தமிழர்கள் ஏமாற்றப்படுவதுதான் இம்முறையும் அரங்கேறப் போகின்றது. யதார்த்தமும் இதுவே.

ஆசிரியருக்கான கடிதம்

# மிளகாய் அரைக்கும் படலம் ஆரம்பம்

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குகின்றது. இனி வீரவசனங்களும் வெறும் உறுதி மொழிகளும் அள்ளி வீசப்படுதோடு தமிழர் தலைகளில் மிளகாய் அரைக்கும் வேலைக்கும் பஞ்சமிருக்காது. 1987ஆம் ஆண்டில் போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று கொக்கரித்த பேரினவாத ஜே.ஆர். ஜெயவர்த்தன தொடக்கம் இன்று பதவியில் இருக்கும் மைத்திரிபால வரை எவருமே தமிழர்களுக்கு உரித்தான, தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைத் தரவில்லை. நீதித்துறை கூட பௌத்த பேரினவாதிகளால் தற்போது தகர்த் தெறியப்பட்டுள்ளது. காணாமற்போன உறவுகளின் குடும்பங்கள் வருடக் கணக்கில் போராடியும் தமிழ் தலைவர்களால் எதுவுமே செய்யவோ பதிலளிக்கவோ முடியாத பெட்டிப் பாம்பாக இருக்கின்றனர். இவர்களால் எப்படி தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுத்தர முடியும். மீண்டும் பௌத்த பேரினவாத அரசுக்கு முண்டுகொடுத்து தமிழ் மக்களை ஏமாற்றுவதைத் வேறுவழி யேதுமில்லை?. இறுதியில் தந்தை செல்வநாயகம் கூறியமைபோல் தமிழ் மக்களை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்.

**அ.அன்பு,வரணி**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# டெங்கைக் குறைக்க முற்பட்டால் பெருகுகிறது உண்ணிக்காய்ச்சல்

## தென்மராட்சியில் இந்த நிலை

சாவகச்சேரி, ஜன. 28
கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல, டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த பற்றைகளைத் துப்புரவு செய்வோர் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனவரி மாதத்தில் நேற்றுவரை உண்ணிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 47 பேர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
கடந்த மாதம் டெங்குத் தொற்றுக்கு இலக்காகி 203 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.
சுகாதாரத் திணைக்களத்தினரும் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினரும் இணைந்து ஒரே நாளில் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் டெங்குப் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர். டெங்கு உருவாகக் கூடிய இடங்கள் இனங்காணப்பட்டு பற்றைகளைத் துப்புரவு செய்ய காணிகளின் உரிமையாளர்களுக்கு கிராம அலுவலர்களால் அறிவுறுத்தப்பட்டது.
டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டன. இதன் பயனாக ஜனவரி மாதத்தில் டெங்கால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 131 ஆகவுள்ளது.
டிசெம்பர் மாதம் 11 ஆகக் காணப்பட்ட உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளது.
வெள்ளம் வழிந்தோடி நிலம் காய்ந்துவரும் நிலையில் பற்றைகளில் காணப்படும் உண்ணிகள் அவற்றை துப்புரவு செய்வோரைக் கடிப்பதாலும் பற்றைகளில் உள்ள குழைகளை உண்ணும் கால்நடைகளில் தொற்றி அவற்றை வளர்ப்பவர்களைக் கடிப்பதாலும் உண்ணிக் காய்ச்சல் பரவுகிறது.
இதனால் பற்றைகளைத் துப்புரவு செய்வோர் தாங்கள் அணிந்துள்ள உடைகளைக் களைந்து காயவிடுமாறும், வளர்ப்பு ஆடு மாடுகளில் தெள்ளு பரவாமல் உரிய மருந்துகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்துமாறும் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (த-9)

# தனியார் மருத்துவ நிலையங்கள் பதிவு

கொழும்பு, ஜன. 28
மருத்துவர்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவ நிலையங்கள் தொடர்பில் கணக்கெடுப்பொன்றை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக, சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.
இந்தக் கணக்கெடுப்பு, எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மருத்துவர்களின் பெயர்களில் உள்ள தனியார் மருத்துவ நிலையங்கள் தொடர்பில் கடந்த 2017 ஆம் ஆண்டே இறுதியாக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. 657 மருத்துவ நிலையங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன. உரிய தரத்தைப் பின்பற்றாத தனியார் மருத்துவ நிலையங்கள் காரணமாக பல பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### வலி. மேற்கில்
# சமூக பொருளாதார மேம்பாட்டு மையம்



மூளாய், ஜன. 28
வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவில் சமூக பொருளாதார மேம்பாட்டு ஒருங்கிணைப்பு மையம் அமைக்கப்படவுள்ளது.
மேற்படி பிரதேச செயலர் பிரிவில் உள்ள பனிப்புலம் கிராம அலுவலர் பிரிவிலேயே இந்த சமூக பொருளாதார மேம்பாட்டு ஒருங்கிணைப்பு மையம் அமைக்கப்படவுள்ளது.
இந்த மையத்துக்கான கட்டடத்தை அமைத்துக்கொள்வதற்கான இரண்டு பரப்பு காணியை இதே கிராமத்தை சேர்ந்த தில்லைநாதன் நடராசா தம்பதிகளின் ஞாபகார்த்தமாக அவர்களது பிள்ளைகள் அன்பளிப்பு செய்திருந்தனர்.
அதற்கான ஆவணங்களை வலி மேற்கு பிரதேச செயலரிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த வாரம் மேற்படி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. (ஜ-121)

# ராஜபக்ஷ க்களுடன் 'டீல்' போட்டவர்களை நீக்குங்கள்

## சஜித்திடம் பொன்சேகா கோரிக்கை



கொழும்பு, ஜன. 28
கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ராஜபக்ஷக்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவர்களை இனங்கண்டு, சஜித் பிரேமதாஸ விலக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐக்கிய தேசியக் கட்சியில் தலைவர் தொடர்பாக நான் ஒன்றைக் கூறிக்கொள்கிறேன். கம்பஹா மாவட்டம் என்பது 18 இலட்சம் வாக்குகளைக் கொண்ட மாவட்டமாகும்.
இந்த மாவட்டத்துக்கு ஏதாவது பெரிதாக செய்ய வேண்டும் என ரணிலிடம் அழாத குறையாக கேட்டிருந்தேன். ஆனால், அவர் அதனை மேற்கொள்ளவில்லை. 2019 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்குக்காக 63 பில்லியன் ரூபாவைச் செலவழித்தார். ஒரு வருடத்தில் இவ்வளவு பெரிய தொகையை எவ்வாறு செலவழிப்பது?
இது தொடர்பாக அடிப்படை அறிவு அவசியமாகும். அதிகளவிலான வாக்குகள் கிடைக்கும் மாவட்டங்களுக்கு 4 வருடங்களாக 10 பில்லியன் ரூபாவைக் கூட செலவழிக்கவில்லை.
இந்தத் தவறு மட்டுமன்றி, மத்திய வங்கியில் பிணைமுறி மோசடியும் இடம்பெற்றது. இவைதான் எமது தோல்விக்கு வழிவகுத்தன.
நாம் அடுத்த கட்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டுமெனில், திருடர்களை இணைத்துக் கொள்ளாமல் பயணிக்க வேண்டும். எமது தரப்பிலுள்ள சிலர் ராஜபக்ஷகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இவ்வாறானவர்களை சஜித் பிரேமதாஸ இனங்கண்டு அவர்களை விலக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், மீண்டும் தோல்வியையே எம்மால் சந்திக்க நேரிடும், என்றார். (ஓ.5)

# சந்தையில் இடநெருக்கீடு

யாழ்ப்பாணம், ஜன. 28
கல்வியங்காடு செங்குந்தா மீன்விற்பனைச் சந்தையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியால் நுகர்வோர் சிரமப்பட்டு வருகின்றனர். சந்தைக் கட்டடத்துக்குச் செல்வதற்கு ஒரு வழிப் பாதை உள்ளது. அத்துடன் கட்டடம் சிறிதாக இருந்தாலும் வியாபாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. சந்தைக்குத் தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் வருகின்றமையால், சந்தைக்கு உள்ளே மக்களின் நெரிசல் அதிகரித்தும் காணப்படுகின்றன. நெரிசலால் அவர்கள் கடலுணவுகளைக் கொள்வனவு செய்வதற்குச் சிரமப்பட்டுவருகின்றனர்.
இது தொடர்பாக யாழ். மாநகரப் பிரதி முதல்வர் து. ஈசனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, இது தொடர்பில் சிலர் முறைப்பாடு செய்துள்ளனர். சந்தை நிலைவரம் தொடர்பில் விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்-என்றார். (க-17)

# மைதானத்தில் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜன. 28
கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. புற்களால் நிரம்பி காணப்பட்டமைதானத்தை யாழ். மாநகரத் தொழிலாளர்கள் துப்புரவு செய்து வருகின்றனர். பாடசாலையில் இல்லமெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு மைதானத்தைத் துப்பரவு செய்து தருமாறு பாடசாலை நிர்வாகத்தினர் மாநகரப்பிரதி முதல்வரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்தக் கோரிக்கைக்கு அமைவாக மைதானத்தில் படர்ந்து வளர்ந்திருந்த புற்கள், செடிகள் என்பன அகற்றப்பட்டு வருகின்றன. (க-17)

### நல்லாட்சியால்
# வேலை வாய்ப்புக்களை வழங்கவே முடியவில்லை

## சம்பிக்க கவலை

கொழும்பு, ஜன. 28
நான் மஹிந்த ஆட்சியில் அமைச்சராக இருந்தபோது 4 ஆண்டுகளில் 4 ஆயிரம் வேலை வாய்ப்புக்களை வழங்கியுள்ளேன். நல்லாட்சி அரசின் காலத்தில் 100 வேலை வாய்ப்புக்களை வழங்கக்கூட எம்மால் முடியாமல் போனது.
இது எமது தவறு என்பதை நாம் உணர்ந்துள்ளோம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ராஜபக்ஷ அரசு மார்ச் மாதத்துக்குள் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்களை வழங்கவுள்ளார்கள். இன்னும் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வரும்போது 7 இலட்சம் அரச ஊழியர்கள்தான் இருந்தார்கள். அவர் ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேறும்போது 14 இலட்சமாக அந்த எண்ணிக்கை உயர்ந்திருந்தது.
இடைப்பட்ட 10 வருடங்களில் அவர்களுக்கு ஆதரவானவர்களுக்கே வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. இதுதான் அன்று இடம்பெற்றது.
எதிர்வரும் பொதுத் தேர்தலில் நல்லாட்சி அரசில் இழைத்த தவறுகளை நிவர்த்தி செய்துகொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் பலமான கூட்டணியொன்றுடன் களமிறங்குவோம்-என்றார். (ஓ.5)

# முல்லை மாவட்டத்துக்கு ரூ.272 மில்லியன் தேவை

முல்லைத்தீவு,ஜன.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசின் சபரிகம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிராமங்கள் தோறும் அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக 272 மில்லியன் ரூபா நிதி, நிதி அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் ச.கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

சபரிகம அபிவிருத்திதிட்டத்தின் கீழ் கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் 46 கிராமங்களின் அபிவிருத்திக்காக 92 மில்லியன்ரூபாவும், ,புதுக்குடியிருப்புப் பிரதேசசெயலாளர் பிரிவின் கீழ் 19 கிராமங்களின் அபிவிருத்திக்காக 38 மில்லியன் ரூபாவும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 27 கிராமங்களின் அபிவிருத்திக்காக 54 மில்லியன் ரூபாவும், துணுக்காய் பிரதேசத்தில் 20 கிராமங்களின் அபிவிருத்திக்காக 40 மில்லியன் ரூபாவும், மாந்தை கிழக்கில் 15 கிராமங்களின் அபிவிருத்திக்காக 30 மில்லியன் ரூபாவும், வெலிஓயா பிரதேசத்தில் 9 கிராமங்களின் அபிவிருத்திக்காக 18 மில்லியன் ரூபாவும் தேவையாக உள்ளது.

இது தொடர்பான கோரிக்கை மாவட்டச் செயலாளரின் அனுமதியுடன் நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-19)

## கலசம் வைக்கும் நிகழ்வு பௌத்த விகாரையில்



கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரைக்கு கலசம் வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. நான்கு வணக்க ஸ்தலங்கள் அமைப்பதற்கு தலா ஒரு ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், ஏனைய வணக்க ஸ்தலங்களை அமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. நான்கு வணக்க ஸ்தலங்களும் சம அளவு உயரத்தை கொண்டதாக அமைய வேண்டும் என்பது பல்கலைக்கழகத்தின் அறிவுறுத்தலாகும். என்று தெரிவிக்கப்பட்டது. (த-35)

## வேலைத்திட்ட முன்மொழிவுகள் அனுப்பிவைப்பு

சாவகச்சேரி, ஜன. 28

தென்மராட்சி பிரதேசத்தில் இனங்காணப்பட்ட 79 வேலைத்திட்டங்களுக்கான முன்மொழிவுகள் அனுமதிக்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மக்கள் பங்களிப்புடனான கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவான கிராமம், எனும், சப்ரிகம வேலைத் திட்டத்தில், கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தலா இரண்டு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்தில், பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளில் அவசியமென இனங்காணப்பட்ட வேலைத் திட்டங்களே அனுமதிக்காக இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## இரு நாள்களில் மீட்கப்பட்ட 33 கிலோ கஞ்சா

வவுனியா, ஜன.28

வவுனியா புளியங்குளம் பொலிஸார் இரண்டு நாள்களாக மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் 33 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இரு நாள்களாக வவுனியா வடக்கின் ஏ9 வீதியை மையப்படுத்தி ஓமந்தை மற்றும் புளியங்குளம், கனகராயன்குளம் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் இணைந்து விட நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். இதன்போது யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதி நோக்கிப் பயணித்த பல்வேறு அரச, தனியார் பேருந்துகளைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் வழிமறித்துச் சோதனை நடத்தினர். இதன்போது புளியங்குளம் பொலிஸாரால் 33 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடத்திச்செல்லப்பட்ட 35முதிரை மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை, கனகராயன்குளம் பொலிஸார் 4 கிலோகிராம் கேரளகஞ்சாவை நேற்றுக் கைப்பற்றியிருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-110)

## வீதி விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி,ஜன.28

துவிச்சக்கரவண்டியும்,மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த் தந்தையும், மகளும் காயமடைந்தனர். இந்த விபத்து கொடிகாமம் ஏ 9 முதன்மை வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த சிவராஜா ரதிக்குமார் (வயது 48) அவரது மகளான மிருசுவில் வடக்கைச் சேர்ந்த கபிலன் ரேணுகா (வயது 24) ஆகியோரே காயமடைந்த நிலையில், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

## பல்கலை மாணவருக்கு நிதியுதவி



கிளிநொச்சி,ஜன. 28

பூநகரி பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்ற வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 21 மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் ஊடாக அதன் நிறுவுநரால் இந்த உதவி நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. இந்த மாணவர்களுக்கு குறித்த நிதி உதவி பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும்வரை வழங்கப்படவுள்ளது. இந்த நிகழ்வு பூநகரி பிரதேச இளைஞர் கழகம் மற்றும் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. (ஐ-6)

## அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

தென்மராட்சி கல்வி வலயத்தில் மூன்று பாடசாலைகளில் வெற்றிடமாகக் காணப்படும் அதிபர்பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பாடசாலை வகை 11 ஐச் சேர்ந்த கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை, வகை 111 ஐச் சேர்ந்த தனங்களப்பு அ.த.க.பாடசாலைமட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை ஆகியவற்றில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவத்தை வலய நிர்வாக அலகில் பெற்று பெப்ரவரி பத்தாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (ஐ-9)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்து குருநகர்பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றன. இதன்படி வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் நாளைபுதன்கிழமை ஏற்றப்படவுள்ளது. காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை சிப்பித்தரை வீதியிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல்1.30 மணிவரை 3ஆம் குறுக்குத் தெரு குருநகரிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை4மணிவரை2ஆம் குறுக்குத் தெரு குருநகரிலும் தடுப்பூசி ஏற்றப்படும். எனவே ஒவ்வொருவரும் தங்களது வளர்ப்பு நாய்களுக்குமேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்புக்கோரி போராட்டம்




வவுனியா,ஜன.28

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு கோரியும், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் வவுனியாவில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக கடந்த 1073 நாள்களாகப் போராடிவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். "பத்திரிகைச் சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் முதுகெலும்பாகும், ஒடுக்கப்பட்ட பத்திரிகைச் சுதந்திரம் இராணுவ ஆட்சி அல்லது சர்வாதிகாரத்துக்கு வழி வகுக்கும் " என எழுதப்பட்டிருந்த பதாகைகளைத் தாங்கியவாறும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?, எங்கே பிள்ளைகள் எங்கே?, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து போன்ற கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டனின் கொடிகளை ஏந்தியிருந்தனர். (110)

# கூ. சங்கங்களின் கிளைகள் 'கோப்சிற்றி'களாக மாறும்

யாழ்ப்பாணம்,ஜன. 28
வடக்கு மாகாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிலையங்கள் யாவும் படிப்படியாக 'கோப்சிற்றி'களாக தரம் உயர்த்தப்படும். மக்களைக் கவரும் வகையில் நிலையங்கள் மாற்றியமைக்கப்படும் என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

கூட்டுறவு சங்கக் கடைகளை மினி கோப்சிற்றிகளாக தரம் உயர்த்தி வைப்பதன் ஊடாகவே வியாபார நடவடிக்கைகளை அதிகரிக்க முடியும். அதற்கான செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.
2019ஆம் ஆண்டில் வடக்கில் 14 மினி கோப்சிற்றிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.
இவற்றில் யாழ்ப்பாணத்தில் ஐந்தும், கிளிநொச்சியில் நான்கும், மன்னாரில் மூன்றும், முல்லைத்தீவு, வவுனியாவில் ஒவ்வொன்றுமாக மொத்தம் 14 மினி கோப்சிற்றிகள் திறக்கப்பட்டுள்ளன.
கூட்டுறவுச் சங்கங்கள் தற்போதைய சூழ்நிலை மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு ஏற்ப தமது கிளை நிலையங்களை மினிகோப் சிற்றிகளாக தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை வடக்கு மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உதவியுடன் அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் மூன்று இடங்களில் மக்கள் கூட்டுறவுக் கடைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.
பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் திக்கத்திலும், அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மல்லாகத்திலும், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மந்திகையிலும் மக்கள் கடைகளைத் திறந்து வைத்துள்ளன. (க-17)

## மாணவர்களுக்கு உதவி

வவுனியா.ஜன.28
வவுனியா பொது மருத்துவமனையில் நோய்களால் பாதிக்கப்பட்டு தொடர்ச்சியாக சிகிச்சை பெற்றுவரும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
வீ3 பவுண்டேசன் ஊடாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் நோர்வே வாழ் சமூக ஆர்வலர் சண்முகம் ராஜ்மோகன் இந்தக் கற்றல் உபகரணங்களை வழங்கினார்.
நிகழ்வில் வவுனியா பொது மருத்துவமனை மருத்துவர்கள், ஊழியர்கள், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், அபிவிருத்தி உத்தியோகத்தர் வசந்தரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
(ஐ-222)

## மக்கள் சந்திப்பு



கொடிகாமம்,ஜன.28
கொடிகாமம் மற்றும் கெற்பேலி கிராமங்களில் பொது மக்கள்சந்திப்புஇடம்பெற்றதோடுபல்வேறுவிடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.
நாடாளுமன்றஉறுப்பினர்த. சித்தார்த்தனின் இணைப்புச் செயலாளரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பா. கஜதீபன் இந்த மக்கள் சந்திப்புக்களை நடத்தி வருகின்றார்.
இதன்போது பயன்தரு மரக்கன்றுகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. இச் சந்திப்பில் சாவகச்சேரி பிரதேச சபை உபதலைவர் செ. மயூரன், முன்னாள் சாவகச்சேரி நகராட்சி மன்ற உறுப்பினர் ஞா. கிஷோர் மற்றும்கிராமமட்டஅமைப்புக்களின்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

## திறன் வகுப்பறை கட்டடங்கள் திறப்பு





முல்லைத்தீவு, ஜன. 28
புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையின் திறன் வகுப்பறைக் கட்டடங்கள் இரண்டு கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளன.
நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா அவற்றைத் திறந்துவைத்தார்.
அவரின் ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அவை அமைக்கப்பட்டன.
பாடசாலை முதல்வர் ந. அமிர்தநாதன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் சி. குகனேசன் கலந்துகொண்டார். (து19)

## பனை உற்பத்தி நிலையம் திறப்பு

சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு அருகில் பனை உற்பத்திப்பொருள்கள்கொள்வனவுமற்றும்விற்பனை நிலையம் அடுத்த வாரம் திறக்கப்படவுள்ளது.
தென்மராட்சிபிரதேசபனைஉற்பத்திப்பொருள்களின் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சாவகச்சேரி பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் இந்த நிலையத்தை திறக்கவுள்ளனர்.
பனையோலை உற்பத்திப் பொருள்கள் பனாட்டு ஒடியல். புளுக்கொடியல் உள்ளிட்ட பனைசார் உற்பத்திப் பொருள்களுக்கு தென்பகுதி மற்றும் புலம்பெயர் நாடுகளில் கிராக்கி காணப்படுவதால் அவற்றை பிரதேச பனைசார்உற்பத்தியாளர்களிடம்கொள்வனவுசெய்ய சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று சங்க முகாமையாளர் தெரிவித்தார். (ஐ-9)

## திரையரங்குகளின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை

நாட்டின் திரையரங்குகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரசிகர்களை மீண்டும் ஈர்ப்பதே இதன் நோக்கமாகும் என்று தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி ஜயந்த தர்மதாசதெரிவித்துள்ளார். இதேவேளைதிரைப்படத்துறை எந்தவொரு நாட்டிலும் கலை ஊடகமாக வீழ்ச்சியடையவில்லை. நாட்டில்திரைப்படத்துறைபின்னடைவைக்கண்டுள்ளது. இதனைமீண்டும்வழமைநிலைமைக்குக் கொண்டு வருவதற்கான வேலைத்திட்டமொன்றைமுன்னெடுக்க முடியும் என்று முன்னணி திரைப்படஇயக்குநர்திஸ்ஸலியனசூரியதெரிவித்துள்ளார். திரைப்படத்துறையை மேம்படுத்த அரசின் அனுசரணைதேவைஎன்றும்அவர்மேலும்தெரிவித்துள்ளார். (ஒ.5)

## குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழா

குருநகர்.ஜன.28
குருநகர் பரிசுத்த புதுமை மாதா ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை காலை 5.45 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
நவநாள்கள் தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் நடைபெற்று வருகிறது.
எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணைத் திருவிழா நடைபெறும்.
மறுநாள் இரண்டாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 5 மணிக்கு முதற்திருப்பலியும் தொடர்ந்து காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சுரூப பவனியும் இடம்பெறும்.
திருவிழாத்தருப்பலி யாழ் ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
(ஐ-51)

## இனமுறுகலை ஏற்படுத்தும் முயற்சியில் ரிஷாத்

### செல்வம் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா. ஜன. 28
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தவிசாளரை தரக்குறைவாக பேசிய ரிஷாத்தின் மடமைத்தனமான செயற்பாடுகளை அவர் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
வவுனியாவில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமான செயற்பாடுகளை அமைச்சர் ரிஷாத் தனது ஆதரவாளர்களை வைத்துச் செயற்படுத்தி வருகின்றார். அதன் ஓர் அங்கமே பம்பைமடு குப்பைக் கிடங்கு விவகாரம்.
பல ஆண்டுகளாக வவுனியா நகர் மற்றும் கிராமங்களின் குப்பைகள் பம்பைமடு கிராமத்திலேயே கொட்டப்பட்டு வருகின்றன.
இந்த விடயம் ரிஷாத் பதியுதீனுக்குத் தெரிந்திருந்தும் அப்பாவி முஸ்லிம் மக்களை தனது அரசியல் நலனுக்காகக் குப்பைக் கிடங்குகளையும் பொருட்படுத்தாமல் அதற்கு அருகில் சாளம்பைக் குளத்தில் வனவளத் திணைக்களத்தின் காடுகளை அழித்து குடியேற்றியிருந்தார். இந்த நிலையில் தற்போது தனது தவறை மறைப்பதற்காக அந்த மக்களை ஏவி இதுவரை காலமும் குப்பை கொட்டப்பட்டு வந்த இடத்தை மாற்றவேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டம் செய்யத் தூண்டியுள்ளார்.
அவர் அமைச்சராகவும் அபிவிருத்திக் குழுத் தலைவராகவும் இருந்தபோது குப்பைக் கிடங்கு விவகாரத்துக்கு தீர்வாக சிறந்த முறையில் அதனை அமைப்பதற்கு 200 மில்லியன் பெற்றுத் தருவதாகக் கூறினாரெனினும், நிதியைப் பெற்றுக்கொடுக்கவில்லை. அது வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவரின் தவறல்ல.
இதற்கு மாற்றுத் தீர்வில்லாது குப்பைக் கிடங்கில் குப்பைகளைக் கொட்ட வேண்டாம் என்று கூறுவது மக்களைப் பாதிக்கும். இதனை வெளிப்படையாகத் தெரிவிக்கும் பிரதேச சபைத் தவிசாளரை தரக்குறைவான வார்த்தைகளால் நாடாளுமன்றில் கூறும் தனது தவறை ரிஷாத் மறைத்து விடமுடியாது.
எனவே, தவிசாளர் சரியான தீர்மானத்தை மக்கள் நலன் சார்ந்து எடுக்கும் போது தனது அரசியல் தேவைக்காக அவர் இயங்கவில்லை என்று ரிஷாத் எண்ணுவது மடமைத்தனம்.
பிரதேச சபைத் தலைவரின் மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கு நாம் எப்போதும் உறுதுணையாக இருப்போம் - என்றார். (த-110)

# மக்களின் செயற்றிட்டங்களை எம்.பி. குடும்பம் மாற்றுகிறது?

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் குற்றஞ்சாட்டி தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது

**வலி. தென்மேற்கு, ஜன. 28**

**அரசு வழங்கவுள்ள கிராமத்துக்கு 2 இலட்சம் ரூபா நிதியில், மக்கள் முன்மொழியும் வேலைத் திட்டங்கள் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று வலி.தென் மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வலி.தென்மேற்கு பிரதேச சபையின் இந்த வருடத்துக்கான மாதாந்தக் கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.**

கிராமங்களின் அபிவிருத்தி கருதி, இந்த அரசு பதவிக்கு வந்தவுடன் நாடு முழுவதும் ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு 50 லட்சம் ரூபா வழங்கப்படுமென்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய 13 வேலைத்திட்டங்களின் 5வேலைத் திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யும் என்று அறிவித்திருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு 20 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான 5வேலைத் திட்டங்களை பொதுமக்களின் முன்மொழிவுடன் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் மக்களின் ஆலோசனையின் படி முன்மொழியப்பட்ட 5 வேலைத்திட்டங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும், மக்களால் முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜனும் அவருடைய தந்தையான இராமநாதனும் இணைந்து அரசியல் ரீதியாக மாற்றியமைப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்று சபைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டிய ஈ.பி.டி.பி. யின் உறுப்பினர் அன்ரன் ஜோன்சன், ஏற்கனவே முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்களையே மேற்கொள்ளவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இவரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட ஏனைய உறுப்பினர்கள் மேற்கண்ட தீர்மானத்தை நிறை வேற்றினர். (த-115)




கம்பஹாவில் வர்த்தகர் ஒருவர் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியமையால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

தடகமுவ பிரதேச உணவகத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமையால் மக்கள் பீதியடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் வர்த்தகர் மற்றும் அவரது உதவியாளரை கைது செய்துள்ளார்கள் என வேயங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கலகேடிஹேன குருந்துவத்தை பிரதேச வர்த்தகர் மற்றும் அவருடன் வந்த நபரே என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வர்த்தகர் நவீன ரக துப்பாக்கியால் வானத்தை நோக்கி 8 முறை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் முறைப்பாடு கிடைத்தவுடன் பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரை கைது செய்தமையுடன், நவீன ரக துப்பாக்கியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-5)

# ராஜித வாக்குமூலம்

கொழும்பு, ஜன. 28

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கியுள்ளார். கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற சர்ச்சைக்குரிய 'வெள்ளை வான்' ஊடக சந்திப்பு தொடர்பாகவே அவர் நேற்றுத் திங்கட்கிழமை வாக்கு மூலத்தை வழங்கினார்.

இந்த சம்பவம் தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த மாத இறுதியில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்ட நிலையில் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் கடந்த டிசம்பர் 30ஆம் திகதி, முன்னாள் சுகாதார அமைச்சரை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இருப்பினும், நாடாளுமன்ற உறுப்பினருக்கு பிணை வழங்கிய நீதிவான் நீதிமன்றத்தின் முடிவை எதிர்த்து சட்டமா அதிபர் ஜனவரி 8ஆம் திகதி அன்று திருத்த விண்ணப்பத்தை தாக்கல் செய்திருந்தார்.

ராஜித சேனாரத்னவுக்கு பிணை வழங்கிய உத்தரவுக்கு எதிராக சட்டமா அதிபர் முன்வைத்த மீளாய்வு மனு எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஊடகர்கள் அச்சுறுத்தல்; உடனடியாக விசாரிக்குக!

கொழும்பு, ஜன. 28

மட்டக்களப்பு ஊடகவியலாளர்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பாக பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கைவிடுத்துள்ளது.

அண்மையில் மட்டக்களப்பு ஊடக மையத்தில் சில ஊடகவியலாளர்களுக்கு எதிராக துண்டுப்பிரசுரம் மூலம் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலை கண்டித்து கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- 'மட்டக்களப்பிலிருந்துகொண்டு இங்கு நடைபெறும் விடயங்களை வெளி உலகுக்கு வெளிப் படுத்தி வருகின்ற செய்தியாளர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள துண்டுப்பிரசுர அச்சுறுத்தல் மிகவும் தவறானதொரு விடயமாகும்.

அநாமதேயமாக துண்டுப்பிரசுரங்களை வீசி ஊடகவியலாளர்களின் செயற்பாட்டை நிறுத்துவதற்கும் நசுக்குவதற்குமான முயற்சியாகவே அண்மைய மட்டு. ஊடக அமையத்திற்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் பார்க்கிறது.




பல்வேறு சிரமங்கள் மற்றும் அழுத்தங்களுக்கு மத்தியில் மக்களுக்கு பிரதேசங்களில் நடைபெறுகின்ற விடயங்களை வெளிப்படுத்திவரும் வேளையில் அச்சுறுத்தல் செயற்பாடுகள் கவலையளிக்கின்ற ஒன்றாகவே பார்க்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பிலுள்ள செய்தியாளர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஊடக சுதந்திரம் என்பது கேட்டுப் பெறவேண்டியதல்ல. இவ்வாறான செயற்பாடுகள் ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவே அமையும்.

ஊடகச் செயற்பாடுகளுக்கு பாதுகாப்பான சூழல் இருக்க வேண்டும் என்று அனைவரும் கோரி வருகின்ற நிலையில் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் உண்மையானதும் நேர்மையானதும் நடுநிலைமையானதுமான தகவல்கள் வெளிவருவதில் சிக்கலையே ஏற்படுத்தும். மட்டு. ஊடக அமையத்தில் வீசப்பட்டிருந்த அச்சுறுத்தல் துண்டுப்பிரசுரம் குறித்த பல்வேறு ஊகங்கள் வெளியிடப்பட்டு வருகின்ற வேளையில், இவ்வாறான விடயங்கள் குறித்து பக்கச்சார்பற்றதும் சரியானதுமான விசாரணைகள் உடனடியாக நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் வெளிப்படுத்தப்படுவதுடன், தண்டனை வழங்கி ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்குமான பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். அத்துடன், பொது மக்களின், சமூகத்தின் செய்திகளை வெளிப்படுத்தி வருகின்ற செய்தியாளர்களுக்கு எதிராக ஏற்படுத்தப்படும் இதுபோன்ற அச்சுறுத்தல் சம்பவங்கள் நடைபெறாமலிருப்பதற்கான நம்பிக்கையினையும் ஏற்படுத்துதல் வேண்டும்.

அதே நேரத்தில் பொது, சமூக அமைப்புக்களும் பொதுமக்களும் இது போன்ற விடயங்களில் குழப்பமடையாது ஊடக உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான ஒத்துழைப்பினை வழங்குதல்வேண்டும்' என்றுள்ளது. (ம)

# புதிய மாவட்டச் செயலர் மட்டக்களப்பில் பதவியேற்பு

மட்டக்களப்பு, ஜன. 28

மட்டக்களப்பு மாவட்ட புதிய மாவட்டச் செயலராக திருமதி கலாமதி பத்மராஜா உத்தியோகபூர்வமாக நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பொதுமக்களின் தேவையை உரிய நேரத்துக்குள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். அதற்குத் தேவையான அர்ப்பணிப்பை உத்தியோகத்தர்கள் வழங்கவேண்டுமென, கடமையேற்கும் சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர்களிடம் கேட்டுக் கொண்ட கலாமதி, 30 ஆண்டு காலப் போரால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளையும் கட்டியெழுப்பத் தேவையான நடவடிக்கைகளை தன்னால் முடிந்தளவு முன்னெடுக்கப் போவதாகவும் கூறினார்.

இவர், கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலராகவும் மண்முனை வடக்கு பிரதேச செயலாளராகவும் பணியாற்றிய பின்னர், கிழக்கு மாகாண சபையில் பிரதி பிரதம செயலாளராக நிர்வாகம், பயிற்சியும் ஆலோசனையும் எனும் பதவிகளிலும், கிழக்கு மாகாண சபையின் பேரவைச் செயலராகவும், ஏற்கனவே பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# சமூகப் பிரச்சினையை ஏற்படுத்துகிறார் அங்கஜன்

## பத்து அமைப்புக்கள் இணைந்து குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 28

ஈவினை பிரதேசத்தில் அனைத்துச் சமூகங்களும் ஒற்றுமையுடன் பல திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ளன. எமக்குள் பிரச்சினையை ஏற்படுத்தும் அரசியல் குரோத செயற்பாடாகவே, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் கருத்தைப் பார்க்கின்றோம். இவ்வாறு ஈவினையைச் சேர்ந்த பத்து பொது அமைப்புக்கள் இணைந்து கடிதம் அனுப்பியுள்ளன.

கடந்த 23ஆம் திகதி உதயன் பத்திரிகையில், 'பரிந்துரை செய்த பின்னர் திட்டத்தில் திடீர் மாற்றம்' என்ற தலைப்பில் செய்தி வெளியாகியிருந்தது. யாழ்ப்பாணம் உடுவில் பிரதேச செயலர் பிரிவில், கிராம மக்களின் ஒத்துழைப்புடன் முன்மொழியப்பட்ட திட்டம் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரால் மாற்றப்பட்டமை தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், அந்தப் பகுதியில் ஒரு தொகுதி மக்கள் தாம் சமூக ரீதியில் வேண்டுமென்றே புறக்கணிப்புச் செய்யப்பட்டார்கள் என வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாகவே இது மாற்றப்பட்டது என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தெரிவித்த கருத்துக்கு, ஈவினையைச் சேர்ந்த 10 அமைப்புக்கள் இணைந்து கண்டனம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் அதிகாரத் தன்மையான பொறுப்பற்ற செயலை கண்டிக்கின்றோம். ஏனெனில் 10 பொது அமைப்புக்கள் ஒன்றாக இணைந்தே இந்தத் திட்டங்களை முன்மொழிந்திருந்தோம். அவர் (அங்கஜன்) சொல்கின்ற எல்லோரும் இவ் அமைப்புக்களில் உள்ளனர் என்பதைத் தெரிவிப்பதோடு ஒற்றுமையாக எல்லா சமூகங்களின் விட்டுக் கொடுப்புக்களுடன் பல திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்திய எமக்குள் பிரச்சினையை ஏற்படுத்தும் அரசியல் குரோத செயற்பாடாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம்.



பொறுப்பானவர்கள் தங்களுடைய தேவைக்கேற்ப செயற்படுவது வேதனைக்குரியது, கண்டனத்திற்குரியது. எம்மால் முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக வுள்ளோம்-என்றுள்ளது. (ஒ,5)





## வவுனியா மாவட்டத்துக்கு புதிய செயலர் நியமனம்

வவுனியா,ஜன.28

வவுனியா மாவட்டத்தின் புதிய மாவட்டச் செயலர் எஸ். எம். சமன்பந்துலசேன நேற்றுத் திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வவுனியா மாவட்ட முன்னாள் செயலர் ஐ.எம். ஹனீபா தலைமையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் மாலை அணிவித்து புதிய மாவட்டச் செயலர் வரவேற்கப்பட்டார். தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் நான்கு மதங்களையும் சேர்ந்த மதகுருமார் ஆசிகளை வழங்கினர்.

மேலும் நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக செய லர் தி. திரேஸ்குமார் உட்பட மாவட்ட செயலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-18,110)

## ஏ- 9 வீதியில் கடும் சோதனை

யாழ்ப்பாணம்,ஜன.28

ஏ-9 வீதியில் வாகனங்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. தென்பகுதியிலிருந்து வடக்குக்கு வருகை தரும் வாகனங்களும், வடக்கிலிருந்து தென்பகுதிக்குச் செல்லும் வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

வீதியில் நிற்கும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் அனைத்து வாகனங்களையும் மறித்து சோதனையிட்டு வருகின்றனர்.

பயணிகளை இறக்கி அவர்களது உடைமைகளைப் பரிசோதிப்பதுடன், அவர்களது ஆள் அடையாள அட்டையும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் நீண்ட தூரப் பயணிகள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மாங்குளம் - வவுனியா நகருக்கு இடையில் மட்டும் 4 இடங்களில் சோதனைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வருட ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து நாட்டில் பரவலாக சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன. சிறிது காலத்தின் பின்னர் தளர்த்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-160)



## ஆசாமி சிக்கினார்

கொழும்பு, ஜன. 28



இளம்பெண்ணிடம் 20 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்தமை, அந்தப் பெண் மீது வன்புணர்வுக்கு முயற்சித்தமை போன்ற இரு குற்றச்சாட்டுக்களுக்கு அமைவாக நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட ஆசாமியை இரண்டு லட்சம் ரூபா ஆள் பிணையில் விடுவித்தமை யுடன், ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு ப்ணிக்கப்பட்டுள்ளது.

கிராந்துருகோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜானக்க விதானாராய்ச்சி, ஆசாமியைக் கைது செய்து, நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தார். கிராந்துருகோட்டை யைச் சேர்ந்த அலுத்தர என்ற இடத்தின் ஆசாமியே கிராந்துருகோட்டைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவராவார்.

தனது கணவன் தன்னை விட்டுப்பிரிந்து சென்றதாக நம்பிக்கை கொண்டிருந்த 27 வயது நிரம்பிய இளம் பெண், மீளவும் தனது கணவனை தனக்குப் பெற்றுத்தருமாறு, இவரிடம் கோரியுள்ளார். ஆரம்ப பூசை செலவுகளுக்கு இருபதாயிரம் ரூபா பணத்தை அந்தப் பெண்ணிடமிருந்து ஆசாமிபெற்றுள்ளார். பூசைக்கு இளம்பெண்ணை மட்டும் தனிமையில் வரும்படி கோரியதற்கமைய, அவர் சென்றுள்ளார். பெண்ணை ஆசாமி வன்புணர்வுக்கு உட் படுத்த முயற்சித்துள்ளார்.

அங்கிருந்து தப்பிச்சென்ற இளம்பெண் கிராந்துருகோட்டை பொலிஸ் நிலையம் சென்று, தனக்கேற்பட்ட நிலை குறித்தும் தன்னிடம் பெற்ற இருபதாயிரம் ரூபா பணத்தை மோசடி செய்தமை குறித்தும் முறைப்பாடு செய்தார். அதற்கு அமைவாக அந்த ஆசாமி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்றில் முற்படுத்தப்பட்டார். (ஒ,5)



## கிளி. செயலர்கள் கடமையேற்றனர்

கிளிநொச்சி, ஜன. 28

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு நியமிக்கப்பட்ட மாவட்டச் செயலர் மற்றும் மாவட்ட மேலதிக செயலர் ஆகியோர் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலராக திருமதி றூபவதி கேதீஸ்வரன் கடமைகளைப் பொறுப்பேற்றார். மீள் குடியேற்றம் முதல் 2015ஆம் ஆண்டுவரை கிளிநொச்சி மாவட்டச் செயலராகச் செயற்பட்ட அவர், பின்னர் முல்லைத்தீவு மாவட்டச் செயலராக இடமாற்றம் பெற்றார். தற்போது மீண்டும் கிளிநொச்சிக்கு இடமாற்றப்பட்டு கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டச் செயலக பதில் செயலராகக் கடமையாற்றிய எஸ்.சத்தியசீலன் நேற்றுக் கடமைகளை புதிய மாவட்டச் செயலர் றூபவதியிடம் கையளித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் மற்றும் அத்தியாவசிய விடயங்கள் தொடர்பில் நீண்ட கவனம் செலுத்தி, மக்களுக்கு வேண்டிய சகல விடயங்களையும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளேன் என்று றூபவதி தெரிவித்தார்.

இதுமட்டுமன்றி, கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலராக கனகராஜா சிறிமோகனன் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலராகக் கடமையாற்றிவந்த எஸ்.சத்தியசீலன் திறைசேரிக்கு மாற்றம்பெற்றுச் செல்லும் நிலையில், அந்த வெற்றிடத்துக்கு வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராகவும், தேசிய அருங்கலைகள் பேரவையின் வடக்கு மாகாண ஒருங்கிணைப்பு அலுவலராகவும் செயற்பட்ட சிறிமோகனன் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (த-6)

# சரணடைந்தவர்களுக்கு இறுதியில் என்ன நடந்தது?

## வெளிப்படையாகக் கூறுங்கள் என்கிறார் சிவசக்தி ஆனந்தன்

முல்லைத்தீவு,ஜன.28



படையினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது. ஆயிரம் நாள்கள் கடந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி உறவினர்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதி போர்க் காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்த காரணத்தால், படையினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படையாகக் கூற வேண்டியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

தண்ணீரூற்றுப் பகுதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில், கட்சி தொண்டர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரும் இறந்து விட்டனர் என ஜனாதிபதி கூறியுள்ளார். போரில் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அரசிடம் சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். படையினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது?

நீண்டகாலமாக அரசியல் கைதிகளாக இருப்பவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டியுள்ளது. போர் முடிந்து பத்து ஆண்டுகளாகவும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படாத நிலைமை இருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் வெறும் கண் துடைப்புக்காகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அலுவலகத்தை நாடாளுமன்றத்தில் இந்த அரசு கொண்டு வந்துள்ளது இதன்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் காலையில் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலகம் மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை என்று கூறிவிட்டு, மாலையில் அது தொடர்பிலான சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் அரசியல் கைதிகள், காணாமல் ஆக்கப்பட்டோர் உள்ளிட்ட பல விடயங்களுக்குத் தீர்வு காணக்கூடிய வாய்ப்புகள் இருந்தும், தமிழ் மக்களின் நலன் சார்ந்து எந்தவித நிபந்தனைகளும் விதிக்காமல் நான்கரை ஆண்டு காலம் நல்லாட்சி அரசுக்கு முண்டு கொடுத்து விட்டு தற்போது புதிய ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளோம் எனக் கூறுகின்றனர்.

கம்பெரலிய மீதிப்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இரண்டு மாத காலம் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக தவம் இருக்கின்றனர். சரியான நேரத்தில் தவறான முடிவை எடுத்துவிட்டு இன்று ஜனாதிபதியைச் சந்திக்க தவம் இருக்கின்றனர். என்றார்.

(க-19)



# முல்லைத்தீவில் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள்

முல்லைத்தீவு,ஜன.28

வன்னிக்குறோஸ் நிறுவனம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாபெரும் விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை,கலாசார நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு சுனாமி நினைவாலய மண்டபத்தில் வன்னிக்குறோஸ் கலாசார பேரவையின் முல்லைத்தீவு மாவட்டத் தலைவர் சி.நாகேந்திரா தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் செ பிறேமகாந், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ம.தொம்மைப்பிள்ளை, வன்னிக்குறோஸ்கலாசார பேரவையின் முல்லைத்தீவு மாவட்டத்தின் செயலாளர் சி .வேதவனம், வன்னிக்குறோஸ் மகளிர் பேரவையின் தலைவி சு. வளர்மதி, வன்னிக்குறோஸ் முன்பள்ளி கல்விமேம்பாட்டுப் பேரவை தலைவர் க.விமலதாஸ், வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் இணைப்பாளர் ச.ரூபன் புதுக்குடியிருப்பு வணிகர் சங்கத்தின் தலைவர் செல்வச்சந்திரன், புதுக்குடியிருப்பு பிரதேச முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவன் தசிதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-19)





## வாசிப்பு மாத நிகழ்வு

சாவகச்சேரி,ஜன.28

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், ஒலுமடு பொது நூலகங்களின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு கடந்த சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா, சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அலுவலர் சி.சிவசுப்பிரமணியேஸ்வரன், கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலய அதிபர் வி.பன்னீர்ச்செல்வம். ஒட்டுசுட்டான் இந்து தமிழ் கலவன் வித்தியாலய அதிபர் வே.நித்தியகலா உட்பட பலர் கலந்து கொண்டனர்.(ஐ-9)

# நாளை மின் தடை



யாழ்ப்பாணம்,ஜன.28

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வவுனியா மாவட்டத்தில் மதவுவைத்தகுளம் கிராமம், அவுசதப்பிட்டிய கிராமம்,மகாறம்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஐ)

# சமலின் கீழ் குடிவரவு, குடியகல்வு

கொழும்பு. ஜன. 28



குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் முன்னர் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்தது. இனிமேல் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் கீழ் செயற்படவுள்ளது. (ஒ,5)

# பிலிப்பைன்ஸ் கப்பல்கள் கொழும்பில்!

கொழும்பு. ஜன. 28

பிலிப்பைன்ஸ் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

ரமோன் அல்கராஸ் மற்றும் டவோ டெல்சூர் ஆகிய இரண்டு கப்பல்களே கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

கப்பல்களில் வருகை தந்துள்ள கட்டளைத் தளபதி உள்ளிட்ட குழுவினர், தன்னார்வ கடற்படை தலைமையகத்தின் தளபதி ரியர் அட்மிரல் சுமித் வீரசிங்கவுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் நாளை வரை தங்கியிருக்கவுள்ள இவர்கள், கடற்படையினர் ஏற்பாடு செய்துள்ள விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ,5)

# சைக்கிள்கள் திருடிய இளைஞர் மாட்டினார்



யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ். நகரில் நீண்ட காலமாக துவிச்சக்கர வண்டிகளை திருடி வந்த சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

நகர்ப்பகுதிகளில் தொடர்ச்சியாக துவிச்சக்கர வண்டிகள் திருடப்பட்டு வந்தன. பாதிக்கப்பட்ட பலர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர். அதற்கமைய யாழ்ப்பாணம் பொலிஸார் துவிச்சக்கர வண்டி திருடர்களைப் பிடிப்ப தற்காக சில நாள்களாகக் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் துவிச்சக்கர வண்டிகளை திருடும் நபர் எனச் சந்தேகிக்கப்படும் நல்லூர் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 8 பெண்களுக்கான துவிச்சக்கர வண்டிகளும், 2 ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் என மொத்தமாக 10 துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.


(க-20)

## கொரோனா வைரஸ்

# மாணவரைச் சீனாவிலிருந்து அழைக்கின்றது இலங்கை

கொழும்பு, ஜன. 28

**கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவியுள்ள சீனாவின் வுஹான் மற்றும் சிச்சுஆன் மாகாணங்களில் உள்ள மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து இலங்கையர்களையும் உடனடியாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.**



ஜனாதிபதி அலுவலகம், வெளிவிவகார அமைச்சு, சுகாதார அமைச்சு, பீஜிங் நகரில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் சிறிலங்கன் விமான சேவை ஆகியன இணைந்து விசேட நிகழ்ச்சித் திட்டமொன்றைமுன்னெடுத்துள்ளது.

வுஹான் மாகாணத்துக்கு உள்வருவது மற்றும் அங்கிருந்து வெளியேறுவதை சீன அதிகாரிகள் தற்போது தடை செய்துள்ளனர். தடை நீக்கப்பட்டதும் அங்குள்ள மாணவர்களை அழைத்துவருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சிச்சுஆன் மாகாணத்தில் செங்டு நகரில் உள்ள சுமார் 150 மாணவர்களை அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்றை பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் சர்வதேச உறவுகளுக்கான மேலதிகச் செயலர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

தெனின் நகரில் உள்ள மேலும் 30 மாணவர்கள் உட்பட பல்வேறு பகுதிகளிலும் கல்வி கற்று வரும் 790 பேர் தொடர்பான தகவல்கள் தூதரக்த்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அவர்களும் விரைவாக அழைத்து வரப்படவுள்ளனர்.


சீனாஎங்கும்பரந்திருக்கும்அனைத்து மாணவர்கள் மற்றும் இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன எனவும் வெளிவிவகார அமைச்சின் செயலர்ரவிநாத்ஆரியசிங்கதெரிவித்தார்.

சீனாவிலிருந்து இலங்கைக்கு வரும் அனைவரும் விமான நிலையத்தில் நோய்த்தொற்று தடுப்புக்கு உட்படுத்தப்படுவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார். எவரேனும் காய்ச்சல் நிலைமைக்குள்ளாகி இருக்கிறார்கள் எனக் கண்டறியப்பட்டால்அவர்கள்மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவர். அவர்களின் குருதி மற்றும் சிறுநீர் மாதிரிகள் பொரளையில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தற்போதைய நிலைமை தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி அனைத்து சுகாதார அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளார். நோய் கண்காணிப்பு வசதிகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திடம் உள்ளது. மருத்துவ உபகரணங்கள் அல்லது இரசாயனப் பொருள்களை கொண்டு வருவதற்கான தேவை ஏற்பட்டால் விமானத்தின் மூலம் கொண்டு வருவதற்கு அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றுள்ள தாகவும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜயருவன் பண்டார தெரிவித்தார். தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உதவிகளை வழங்க உலக சுகாதார நிறுவனமும் முன்வந்துள்ளது. (ஒ.5)

# கொரோனா வைரஸால் தங்கம் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 28



உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தலாக மாறி வரும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக தங்கத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்படும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் வாரம் 4 பவுண் தங்கம் ஆயிரத்து 600 அமெரிக்க டொலரை தாண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. 2003ஆம் ஆண்டு சார்ஸ் வைரஸ் பரவிய சந்தர்ப்பத்தில் இவ்வாறு தங்கத்தின் விலையில் பெரிய அதிகரிப்பு ஏற்பட்டது. இது தொடர்பில் தீர்மானமிக்க கலந்துரையாடல் ஒன்று அமெரிக்க மத்திய கூட்டத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு வரி அறவீடு மாற்றமடையாமல்பார்த்துக்கொள்வதற்குதீர்மானிக்கப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. பாதுகாப்பான முதலீடும் தங்கத்தின் விலை உயர்வுக்கு வழிவகுக்கும் என்று குறிப்பிடப்படுகின்றது.

உலக சந்தையில் கடந்த வார இறுதியில் தங்கத்தின் விலை ஆயிரத்து 550 அமெரிக்க டொலர் வரை அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# அவசர தொலைபேசி இலக்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 28

24 மணி நேர உடன் தொலைபேசி இலக்கத்தைச் சீனாவில்உள்ள இலங்கை தூதரகம் அறிமுகம் செய்துள்ளது. இந்த தொலைபேசி இலக்கத்தினூடாக கொரோனா வைரஸ் தொடர்பாக சீனாவில் உள்ள இலங்கை மக்கள் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். 00861065321861/2 என்ற தொலைபேசி இலக்கத்தையே இலங்கை தூதரகம் அறிமுகம் செய்துள்ளது.

கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த சீனா கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளது. சட்டவிரோதமாக வனவிலங்குகளை விற்பனை செய்து வந்த மத்திய சீன நகரமான வுஹானில் உள்ள கடல் உணவு சந்தையில் கடந்த ஆண்டு பிற்பகுதியில் உருவாகியிருக்கலாம் என நம்பப்படும் இந்த வைரஸ், பீஜிங் மற்றும் ஷாங்காய் உள்ளிட்ட நகரங்களுக்கு பரவியுள்ளது.

இதேவேளை இந்த வைரஸ் சிங்கப்பூர், தாய்லாந்து, ஜப்பான், பிரான்ஸ், கனடா உள்ளிட்ட பிற நாடுகளுக்கும் பரவியுள்ளதுடன் இதனால் அந்த நாடுகளில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வைரஸ் குறித்து முன்னதாகவே முன்னெச்சரிக்கை விடுத்திருந்த அமெரிக்காவின் ஜோன் ஹோப்கின்ஸ் மருத்துவ ஆய்வு நிறுவனமானது, வைரஸ் காரணமாக 18 மாதங்களில் 65 மில்லியன் மக்கள் உயிரிழப்பார்கள் என்று எச்சரிக்கை வெளியிட்டுள்ளது. (ஒ.5)

# சீனத் தொழிலாளர்களில் கண் வையுங்கள்

## அரசுக்கு ஐ.தே.க. அறிவுரை

கொழும்பு, ஜன. 28

'கொரோனா' வைரஸ் ஊழித் தாண்டவமாடும் நிலையில் சீனத் தொழிலாளர்களை இலங்கைக்கு அனுமதிப்பது தொடர்பில் அரசு தீர்மானமொன்றை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சீ.அலவத்துவல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீனாவில் 'கொரோனா' வைரஸ் வேகமாக பரவிவருவதால் பயங்கரநிலை உருவாகியுள்ளது. எமது நாட்டு மாணவர்களும் உயர் கல்விக்காக அங்கு சென்றுள்ளனர். எனவே, அவர்களை கூடிய விரைவில் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான வேலைத் திட்டத்தை அரசு முன்னெடுக்க வேண்டும்.

அதேபோல் இலங்கையில் பல துறைகளிலும் சீனப் பிரஜைகள் தொழில் புரிந்து வருகின்றனர். இந்த நிலையில் புத்தாண்டுக்காக சீனா சென்ற அவர்கள் மீண்டும் இங்கு வருவதற்கு தயாராகி வருகின்றனர்.

'கொரோனா' வைரஸ் படு பயங்கரமானது என்றும் அதற்கு இன்னும் மருந்துகூட கண்டுப்பிடிக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. ஆகவே, இது தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

இந்த வைரஸ் நோய் முழுமையாக கட்டுப்படுத்தப்படும் வரையில் சீனத் தொழிலாளர்களை நாட்டுக்கு அனுமதிக்காமல் இருப்பதா அவ்வாறு இல்லாவிட்டால் சிறப்புப் பிரசோதனை பின்னர் அனுமதிப்பதா என உறுதியான தீர்மானம் எடுக்கவேண்டும்.

எமது நாட்டு மக்கள் பொருளாதார சுமையால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வைரஸும் பரவிவிட்டால் அது பெரும் நெருக்கடியாக மாறிவிடும் - என்றார். (ஒ.5,44)

# காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மாற்றிடத்தில் ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய்வு

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கு சுமார் 300 ஏக்கர் மாற்று நிலங்கள் அடையாளம் காணப்பட்டு, அவை தொடர்பான சாத்திய அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தகவலை கைதொழில், வணிக அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார். காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் இரண்டு பிரதான சிக்கல்கள் கண்டறியப்பட்டுள்ளன. சுமார் 300 ஏக்கர் மாற்று நிலங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் சாத்திய அறிக்கை தயாரிக்கப்படுகிறது. அத்துடன், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் தளபதியுடன் அமைச்சர் விமல் வீரவன்ச பேச்சு நடத்தியுள்ளார் என்று கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் செயலாளர் ஜே.ஏ. ரஞ்சித் தெரிவித்தார். இதேவேளை, வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் ஓடுமற்றும் செங்கல் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் அமைச்சு முன்னெடுத்துள்ளது என்றும் அவர் கூறினார். (ஒ.5)



## கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் நோயாளர் காவுவண்டிகள்

கொழும்பு, ஜன. 28

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நோயாளர் காவு வண்டிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன என விமான நிலைய சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக சந்தேகிக்கப்படும் பயணிகளை உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தற்போது விமான நிலைய மருத்துவ அதிகாரிகள், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் சுகாதார அமைச்சின் மருத்துவர் உள்ளடங்கிய குழுவொன்று விரைந்து செயற்பட்டுக்கொண்டிருப்பதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, சீனாவிலிருந்து வருகை தரும் பயணிகளை சோதனைக்கு உட்படுத்துவதற்காக விமான நிலையத்தில் விசேட மருத்துவ பிரிவு ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது. அத்தோடு அந்தப் பயணிகளை சோதனைக்கு உட்படுத்தும்போது விமான நிலைய ஊழியர்கள் பாதுகாப்பு முகமூடிகளை அணியுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

**ஸ்கிறீன் பிறிண்டிங்**

1 Colour, 4 Colour T Shirt printing செய்து கொடுக்கப்படும். மற்றும் அனைத்து விதமான ஸ்கிறீன் பிறிண்டிங் செய்து கொடுக்கப்படும்.

**077 524 4278**

## 81st Birthday Remembrance




**Dr. Rajasingam Theivendran**

Date of Birth : 26.01.1939
Date of Death : 23.03.2016

Fondly Remembered by the Family

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நாகேந்திரன் பேரின்பநாயகம்**

தோற்றம் 06.06.1947 — திதி:- தை சதுர்த்தி — மறைவு 24.01.2015

ஆண்டுகள் ஐந்து சென்றாலும் கூட
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலாது
அன்று எம்முடன் வாழ்ந்து மறைந்தீர்கள்
இன்று மறைந்தும் எம்மை வாழவைக்கின்றீர்கள்
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காக
என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(CS/30812)(11,17)

43, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### கடைக்கட்டடம் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலைகோரல்

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான இல.373. பிரதான வீதியில் அமைந்துள்ள சங்கத்துக்குச் சொந்தமான கடைத் தொகுதி வாடகைக்கு வழங்கப்படவுள்ளது.

01. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள். நிறுவன முகவர்கள் மற்றும் தனியார் போன்றோருக்கு சங்க்த்தின் வியாபார நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளுக்காக வாடகைக்கு வழங்கப்படும்.

02. வாடகைக்கு வழங்கப்படவுள்ள உள் கட்டட அளவு விவரம்:
நீளம் 37 அடி 8 அங்குலம்
அகலம் 30 அடி 0 அங்குலம்

வெளிப்புற முற்பக்க தகரக் கொட்டகை அளவு :-
நீளம் 17 அடி 7 அங்குலம்
அகலம் 30 அடி 0 அங்குலம்

அலுவலக நேரத்தில் ரூபா 10.00 ஐச் செலுத்தி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"கட்டடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கான கூறுவிலை"** எனக் குறிப்பிட்டு **"த்லைவர், யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) இல.127, கே.கே.எஸ்.வீதி"** என முகவரியிட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்பவும்.

**கட்டடத்தினை நேரில் பார்வையிட விரும்பின்:-**

**திங்கள் - வெள்ளி :-** மு.ப. 8.30 - பி.ப. 5.00 வரையும்
**சனி :-** மு.ப. 8.30 - பி.ப. 1.30 வரையும் பார்வையிடலாம்.
**தொலைபேசி இல :-** 021 222 2587 உடன் தொடர்பு கொள்ளவும்.
**விண்ணப்ப முடிவுதிகதி :- 2020.02.13**

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**இல.127, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(IN/12408)(11,17)

## இறை சங்கமம்

தோற்றம் 21 . 12 . 1951



மறைவு 26 . 01 . 2020

**திருமதி பார்க்கவிதேவி சிவநேயன்**

யாழ்ப்பாணம். கொக்குவிலைச் சேர்ந்த திருமதி பார்க்கவிதேவி சிவநேயன் கடந்த 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை பிரபஞ்சத்தினுள் ஐக்கியமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - இரத்தினம் தம்பதிகளின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - ஞானரத்தினம் தம்பதிகளின் மருமகளும். சிவநேயனின் அன்பு மனைவியும். கிருஷ்ணரங்காவின் தாயாரும். ஸ்கந்தராஜாவின் மாமியும். காலஞ்சென்ற ஸ்ரீ ரகுவரன் மற்றும் ஸ்ரீ பாரததேவி. ஸ்ரீ ரங்கநாயகி. ஸ்ரீ பத்மநாதன். ஸ்ரீ சரவணபவன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2020) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி வடக்கு,
கொக்குவில்.


(CS/30861)(11,17)

தகவல்:-
**குடும்பத்தினர்.**

021 205 3119

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 27 . 05 . 1968



இறைவன் அடியில் 21 . 01 . 2020

**சிவஞானரட்ணம் செல்வக்குமரன்**

(கொக்குவில் மேற்கு, சுவிஸ் – சூரிச்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் சூரிச்சை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானரட்ணம் செல்வக்குமரன் கடந்த 21.01.2020 செவ்வாய்க்கிழமை சுவிஸ் சூரிச்சில் சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானரத்தினம் - பூமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும். உமாராஜேஸ்வரியின் (உமா) அன்புக்- கணவரும். செந்தூரன். சமினா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (27.01.2020) திங்கட்கிழமை சுவிஸில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/30855)(11,17)

தகவல்:-
**மனைவி, பிள்ளைகள் (சுவிஸ்)**


சந்தனன் (மைத்துனன் - இலங்கை) - 077 401 6079

# மானியத்தில் முறைகேடு கண்டறியக் குழு களத்தில்

அச்சுவேலி, ஜன.28

**மானிய விலைக்கு விதை உருளைக்கிழங்கைப் பெற்று உரிய முறையில் பயிர்ச் செய்கை நடவடிக்கையில் ஈடுபடாமல்விற்பனை செய்தவர்கள் மற்றும் முறைகேடாகப் பயன்படுத்தியவர்களைக் கண்டறிவதற்கு உயர் மட்ட அதிகாரிகள் குழுவினர் களப் பயணத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

**பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட தோட்டங்களுக்குக் களப் பயணம் மேற்கொண்டு தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.**



மானிய விலையில் பெற்ற விதை உருளைக்கிழங்குகளை உரிய நோக்கத்துக்குப் பயன்படுத்தியவர்கள் எதிர்காலத்தில்விவசாயம் தொடர்பான எந்தவித மான உதவியையும் பெற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு "சிவப்பு பட்டியலில் பதிவு" செய்யப்படவுள்ளனர் என்று யாழ். மாவட்ட செயலகத்தில் செயற்படும் மத்திய அரச விவ சாயத் திணைக்கள வட்டாரங்கள்அறிவித்துள்ளன.

முறைகேடான பயனாளிகளை முற்றாகத் தவிர்த்துக் கொள்வதற்கு வசதியாக கடந்த காலப் போகத்துக்கு மானிய விலையில் விதை உருளைக்கிழங்கை வழங்குவதற்குப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினர், விவசாய சம்மேளனத்தினர், கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள்த னித்தனியாக வும், கூட்டாகவும், இணைந்து பயனாளிகளைத் தெரிவு செய்தனர்.

இந்த நடைமுறையிலும் சில தவறுகள் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதால், உண்மை விவசாயிகளை இனங்கண்டுகொள்வதற்கும், போலிகளைக் கண்டறிந்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் கண்டிப்பான ஏற்பாடுகளை யாழ்.மாவட்டச்செயலகத்தில் உள்ள விவசாயத் திணைக்களம் செய்துள்ளது.

அந்த வகையில் திணைக்கள உயர் அதிகாரிகள் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் உருளைக்கிழங்கு நடுகை செய்யப்பட்ட தோட்டங்களுக்கு நேரடியாக" பயணம் செய்து விதியோகப்பட்டியலுடன்ஒப்புநோக்கி புதிய பட்டியல் மற்றும் விவரங்களைத் திரட்டி வருகின்றனர்.

விதை உருளைக்கிழங்கை மானிய விலைக்குப் பெற்றுக் கொண்டு உரிய முறையில் பயிர்ச் செய்கையில் ஈடுபடாதவர்கள்தொடர்பான விவரங்களைப்பொதுமக்கள்மற்றும்விவசாயிகளைத் தந்துதவுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-11)

## ஒஸ்மானியாவுக்கு உதவியோருக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் அபிவிருத்திக்கு உதவியவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் சேகுராஜிது தலைமையில் இது நடைபெற்றது. நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்த மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் டுக்கும் சேவைகளைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாண கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தேவகுமாரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார் என்று முதல்வரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (து)

## ஓவிய விழாவுக்கு ஆக்கங்கள் கோரல்

சாவகச்சேரி.ஜன.28

அரச சிறுவர் ஓவிய விழா 2020 க்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

விரும்பிய தலைப்பைத் தெரிவு செய்து வரைந்த ஓவியங்களை மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு கலாசாரத்திணைக்களம் மற்றும் அரச கட்புலகலை ஆலோசனைக் குழுவினர் ஏற்பாடு செய்துள்ள விழாவுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 150 ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இரண்டாம் சுற்றுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இரண்டாம் சுற்றுக்குத் தெரிவு செய்யப்படுவோருக்கு மாகாண ரீதியில் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது.

முதலாம் சுற்றின் அனைத்து வெற்றியாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். இரண்டாம் சுற்றில் தீட்டப்படுகின்ற ஓவியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 2020 க்கான ஓவிய விழாவில் சமர்ப்பிக்கப்படும்.

இவற்றில் தெரிவு செய்யப்படுவோருக்கு அரச சிறுவர் ஓவிய விழாவில். பரிசில்களும், விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

5 தொடக்கம் 6 வரையான சிறுவர்கள் பாலர் பிரிவிலும், 7தொடக்கம்9வயதுவரையான சிறுவர்கள் சிறுவர் பிரிவிலும், 10 தொடக்கம் 12 வயது வரையான சிறுவர்கள் கனிஷ்ட பிரிவிலும், 13 தொடக்கம் 15 வரையான சிறுவர்கள்சிரேஷ்ட பிரிவிலும், 16 தொடக்கம் 18 வயது வரையான சிறுவர்கள் சிரேஷ்ட பிரிவிலும் பங்குபற்ற முடியும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் சிறுவர்கள் தென்மராட்சிப் பிரதேச சிறுவர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர். கலாசாரப் பிரி வில் கையளிக்குமாறு. அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)



## குப்பை அள்ளவும் அரசியல் தலையீடு

### ஆளுநர் சுட்டிக்காட்டு

மன்னார்,ஜன.28

இன்று அனைத்துச் செயற்பாடுகளிலும் அரசியல் இருப்பதாக அறிய முடிகிறது. நகர சபையினர் குப்பையை எடுக்கும் போது சில கட்சிகளைச் சார்ந்தவர்களின் வீடுகளில் மட்டுமே குப்பைகளைச் சேகரிக்கின்றனர். ஏனையவர்களின் வீடுகளில்குப்பைகளைச் சேரிப்பதில்லை என்று மக்கள் என்னிடம் தெரிவித்தனர். இது மிகவும் வேடிக்கையான விடயம். குப்பைசேகரிப்பதில் கூட அரசியல் உள்நுழைந்துள்ளது என்று வட மாகாண ஆளுநர்திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

நானாட்டான் பிரதேச சபையின் முருங்கன் உப அலுவலகம் நேற்றுத் திறக்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-

30 வருடத்துக்கு மேல் போரால் பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் தலை நிமிர்ந்து வாழ வைக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் சேவையில் இருக்கின்றோம். உள்ளூராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் மக்களுடன் கருத்து வேறுபாடு, கட்சி வேறுபாடு, தனிப்பட்ட வேறுபாடுகள் இல்லாமல் வழங்கப்பட்ட காலத்துக்குள் மக்களுக்கான சேவைகளை வழங்க வேண்டும்.

மக்களின் பணத்தில் சம்பளம் பெறுகின்றவர்கள் மக்களைக் கஷ்டப்படுத்துவதற்காக இல்லை. மக்களுடைய சேவையில் நாங்கள் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும். என்றார். (க-213)

## சாவ.அங்காடி விற்பனை நிலையங்களில் திருட்டு

சாவகச்சேரி,ஜன. 28

சாவகச்சேரி பொதுச்சந்தைக்குள் உள்ள அங்காடி விற்பனை நிலையங்களில் கடந்த ஒரு வாரமாக திருட்டுக்கள் இடம்பெற்று வருகின்றனஎன வியாபாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் இரவு புடைவை அங்காடி வியாபார நிலையம் உடைக்கப்பட்டு அங்கிருந்த சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

அதே நாளில் அங்குள்ள பழவகை விற்பனைநிலையத்தில் 3 கிலோ வெளிநாட்டு திராட்சைப் பழங்கள் திருடப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு மற்றுமொரு அங்காடி புடைவை விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு அங்குள்ள பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் உரிய தரப்பினர் அங்காடிகளின் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் எடுக்குமாறு வியாபாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-9)

## நிர்வாகம் ஆதரவளித்தால் வணக்க ஸ்தலம் அமையும்

கிளிநொச்சி, ஜன. 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் தாங்கள் முன்வைக்கும் வணக்க ஸ்தல அமைவிடத்துக்கு ஆதரவு வழங்கினால் அதை அமைக்க தயாராக உள்ளோம் என்று தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதி வண. கலாநிதி டானியல் எஸ்.தியாகராஜா தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் வணக்க ஸ்தலங்கள் அமைக்க இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

ஏனைய வணக்க ஸ்தலங்கள் அமைப்பதில் தாமதம் நிலவுகின்றது. இந்த நிலையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (து

# ஒருபுறம் சந்தைப்படுத்தல் வசதிகளில்லை மறுபுறம் விவசாயக் காணிகள் அபகரிப்பு

## விவசாயிகள் திண்டாடுகின்றனர் என்று ரவிகரன் ஆதங்கம்



**முல்லைத்தீவு, ஜன.28**

**முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் அதிகளவான, விவசாய செய்கைகளை உற்பத்தி செய்கின்றபோதும், அந்த உற்பத்திகளுக்கு முறையான சந்தைப்படுத்தல் வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. அதேவேளை விவசாயிகளினுடைய, பல விவசாய நிலங்களை முப்படையினர் ஆக்கிரமித்துள்ளனர். இத்தகைய காரணங்களால் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் பெரிதும் இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.**

விவசாயிகளுக்கான முறையான சந்தைப்படுத்தல் வசதிகள் செய்துகொடுக்கவும், அபகரிக்கப்பட்டுள்ள விவசாயிகளுடைய காணிகளை விடுவிக்கவும் உரியவர்கள் முன்வர வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் மற்றும் பண்ணையாளர் மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; எமது விவசாயிகள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். எனினும் அவர்களுடைய அயராத உழைப்புக்கான பலன் என்பது மிகவும் குறைவாகும். குறிப்பாக எமது விவசாயிகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். கூடுதலான நெல் விளைச்சலை எமது விவசாயிகள் இம்முறை பெற்றிருந்த போதும் அதற்குரிய சந்தைப்படுத்தல் வசதிகள் சரியான முறையில் இன்மையினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இவை ஒரு புறம் இருக்க, எமது விவசாயிகளின் விளைநிலங்கள் பலவும் இராணுவத்தினர், மற்றும் கடற்படையினர், விமானப்படையினர் என முப்படைகளினதும் ஆக்கிரமிப்பில் காணப்படுகின்றன. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில், அம்பகாமம் பகுதியில் பல குளங்களையும், அக்குளங்களின் கீழான பல்லாயிரக்கணக்கான வயல்நிலங்களையும் விமானப்படையினர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றனர். இதே போன்ற நிலைமைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் காணப்படுகின்றன. இவ்வாறாக முப்படையினரும், எமது விவசாயிகளுடைய விவசாய நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கும் நிலையில் அந்த விவசாய நிலங்களுக்குரிய விவசாயிகள், தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதில் பலத்த இடர்பாடுகளுக்குமுகங்கொடுத்து வருகின்றனர். இவ்வாறாக விவசாயிகள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். படையினர் அபகரித்து வைத்திருக்கின்ற எமது விவசாயிகளின் விவசாய நிலங்களை அவர்களிடமே கொடுக்கவேண்டும். அதே வேளை விவசாயிகளுக்கு முறையான சந்தைப்படுத்தல் வசதிகளையும் செய்வதற்கு உரியவர்கள் முன்வரவேண்டும் - என்றார். (ஐ-246)

## மெய்வன்மைப் போட்டி

கொடிகாமம்,ஜன.28

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் ஏ.எஸ்.ஏ அலெக்சாண்டர், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.செல்வரூபன், பழைய மாணவர் (ஆஸ்திரேலியா) கி.ஜெயந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

## செயற்பட்டு மகிழ்வோம்

கொடிகாமம்,ஜன.28

கெற்பேலி அ.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

அதிபர் க.ஞானராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ மயில்வாகனசிங்கம், பழைய மாணவன் கு.சர்வானந்தன், கௌரவ விருந்தினராக கெற்பேலி அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.லோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

✦ ✦ ✦

வடமராட்சி,ஜன.28

குடமியன் அ.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் ய.வினாஷ்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகனசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

### மாணவியின் கண்டுபிடிப்பு விடயத்தில்

## கல்வி நிறுவன இயக்குநர் அதிபருக்கு அச்சுறுத்தலா?

வவுனியா, ஜன. 28

தனியார் கல்வி நிலையம் ஒன்றின் நிர்வாக இயக்குநர் அலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டி வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அதிபர் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதுபற்றி பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவியொருவர் குருதிப் பரிசோதனை செய்யும் தானியங்கி முறையில் நோயாளர்களிடம் பெறும் ரோபோ இயந்திரத்தை கண்டுபிடித்துள்ளார். பாடசாலை அதிபரின் ஒத்துழைப்புடனும் பாடசாலை ஆசிரியர்களின் துணையுடன் கழிவுப் பொருள்களின் ஊடாக ரோபோ ஒன்றை உருவாக்கும் முயற்சியில் மாணவி ஈடுபட்டிருந்தார் என்று செய்தி வெளியாகியிருந்தது. இந்தநிலையில், அந்த மாணவி தனியார் கல்லூரி மாணவி என்றும் தமது கல்லூரியூடாகவே தொழிநுட்ப அறிவைப்பெற்று குருதிப் பரிசோனைக்காக குருதியை நோயாளியிடம் இருந்துபெறுவதற்கான தானியங்கி முறைமையை கண்டுபிடித்தார் என்றும் அந்தத் தனியார் கல்லூரி இயக்குநர் தெரிவித்திருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். விசாரணை தொடர்கின்றது என்று மேலும் தெரிவிக்கப் பட்டது. (த18)



## இறுதிப் போரன்று பிறந்த மாணவிக்கு கௌரவிப்பு

முல்லைத்தீவு.ஜன.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் இறுதிப் போரன்று பிறந்த மாணவி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், கூழாமுறிப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையைச் சேர்ந்த நிஷாந்தி உஷாந்தன் என்பவரும் சித்தியடைந்தார். அவருக்கு ஆங்கில கல்வி நிறுவனமொன்று விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

பாடசாலையில் அதிபர் தலைமையில் கட ந்த வாரம் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. மாணவியுடன், புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய ஏனைய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

2009 மே 18 ஆம் திகதி இடம் பெற்ற இறுதிப் போரன்று நிஷாந்தி உஷாந்தன் பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-19)



## வீரசிங்கம் ஆரம்ப பாடசாலைக்கு வெண்கலம்

முல்லைத்தீவு.ஜன.28

கண்டி நாவலப்பிட்டிய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற "செயற்பட்டு மகிழ்வோம்" நிகழ்வில் தேசிய மட்டத்தில் கலந்துகொண்ட மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை வெண்கலப் பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

தரம் 5 பெண்கள் அணி வெண்கலப் பதக்கத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளது என்று அதிபர் கா.கந்தசாமி தெரிவித்தார். (ஐ-159)

# 2020 புத்தாண்டு பொதுப் பலன்கள்



## சாதகங்களும் 'கவனத்துக்கு' உரியவையும்!

கணிப்பவர்
கே.பி.வித்யாதரன்






## மீனம்

பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

'கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு' என்பதை உணர்ந்தவரான உங்களின் ராசியின் லாப வீட்டில் சுக்கிரன் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். திட்டமிட்டு சில காரியங்களை முடிப்பீர்கள்.

குடும்பத்தில் அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகள் நடக்கும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் ஏற்படும். பழைய நகைகளை விற்று புது டிசைனில் ஆபரணங்கள் வாங்குவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். பங்கு மூலம் பணம் வரும்.

**மனத்தில் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் பிறக்கும் ஆண்டாக அமையும்**

வீட்டில் கூடுதலாக ஒரு தளம் கட்டுவீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.

26.12.20 வரை சனி பகவான் ராசிக்கு 10ஆம் வீட்டிலேயே தொடர்வதால், உங்களிடம் மறைந்து கிடக்கும் திறமைகள் வெளிப்படும். வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். வி.ஐ.பிகளின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் உதவியும் உண்டு. பணபலம் கூடும். புதிய பதவிகள், பொறுப்புகள் தேடி வரும்.

பொது விழாக்களைத் தலைமையேற்று நடத்துவீர்கள். சொத்துப் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். மகனுக்கு அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும்.

ஆண்டின் தொடக்கம் முதல் 12.11.20 வரை உங்களின் ராசிநாதனும் தொழில் ஸ்தானாதிபதியுமான குரு பகவான் உங்களின் ராசிக்கு 10ஆம் வீட்டில் தொடர்வதால், வேலைப்பளு உண்டு. நான்கைந்து வேலைகளை ஒன்றாகச் சேர்த்து பார்க்கவேண்டி இருக்கும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். விலையுயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாளுங்கள். வங்கிக் காசோலையில் முன்பே கையெழுத்திட்டு வைக்கவேண்டாம்.

13.11.20 முதல் வருடம் முடிய குரு பகவான் உங்களின் ராசிக்கு 11ஆம் வீட்டில் அமர்வதால் உங்களின் புகழ், கௌரவம் உயரும். பணவரவு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்களின் அருமையைப் புரிந்துகொள்வார்கள். அவர்களின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் நல்ல விதத்தில் முடியும். அரைகுறையாக நின்ற வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள்.

வங்கியில் கடன் கிடைக்கும். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனையெல்லாம் பைசல் செய்வீர்கள். நல்ல வேலை கிடைக்கும். தற்காலிகப் பணியில் இருப்பவர்கள் நிரந்தரமாக்கப்படுவீர்கள். சித்தர்கள், மகான்களின் ஆசி கிட்டும். குழந்தை பாக்கியம் சிலருக்குக் கிடைக்கும். மகனின் கல்யாணத்தைக் கோலாகலமாக நடத்துவீர்கள். எதிர்பார்த்த விலைக்குப் பழைய மனையை விற்பீர்கள்.

வருடம் பிறக்கும்போது 4ஆம் வீட்டில் ராகு நிற்பதால் முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் போது ஒரு முறைக்கு, பலமுறை யோசித்து கையெழுத்திடுவது நல்லது. வேலைச்சுமை அதிகரிக்கும். வீண்பழியும் வரக்கூடும். ஆனால், செப்டெம்பர் மாதம் முதல் வருடம் முடியும் வரை உங்களின் ராசிக்கு 3ஆம் வீட்டில் ராகுவும் 9ஆம் வீட்டில் கேதுவும் நுழைவதால் எதிலும் ஆர்வம் பிறக்கும். தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள்.

வியாபாரிகளுக்குச் சரக்குகள் விற்றுத் தீரும். கடையை விரிவுபடுத்துவார்கள். வரவு உயரும். வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெறுவார்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் இரட்டிப்பாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு தடையில்லாமல் கிடைக்கும். கேட்ட இடத்துக்கு மாறுதல் கிடைக்கும். உங்களின் தனித்திறமையை அதிகப்படுத்திக்கொள்வார்கள். கலைத்துறையினரைப் பெரிய நிறுவனங்கள் அழைத்துப்பேசும். படைப்புத் திறன் வளரும்.

மகாலட்சுமியை வழிபடுவதால் இரட்டிப்புப் பலன்கள் கிடைக்கும். பெருமாள் கோயில்களுக்குச் சென்று அங்கு அருள்பாலிக்கும் தாயாரை வழிபட்டு வாருங்கள். பசுக்களின் பராமரிப்புக்கு உதவி செய்யுங்கள். மனத்தில் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் பிறக்கும்.

**29.01.2020**
புதன்கிழமை

**விகாரி - தை 15**
திதி: சதுர்த்தி மு.ப. 10.05 வரை
நட்சத்திரம்– பூரட்டாதி முற்பகல் 11.42 வரை
**ராகுகாலம்- 12.36- 2.06 வரை**
**சுப நேரம்- 05.06 -06.36 வரை**
**எமகண்டம்- 8.06- 9.36 வரை**




## மானம் காத்தல்

மனித உடலில் அந்தரங்கமான சில பகுதிகள் உள்ளன. வெளிரங்கமான சில பகுதிகள் உள்ளன. அந்தரங்கமான விஷயங்களை நாம் எப்படி வெளிப்படுத்த மாட்டோமோ அவ்வாறே அந்தரங்கமான பகுதிகளையும் நாம் வெளிப்படுத்தக்கூடாது. அவைகளை மறைத்து வைப்பது தான் மானம். அவைகளை வெளிப்படுத்துவது அவமானம். மானம் காப்பதும் இறைநம்பிக்கையின் ஓர் அங்கமாகவே சேர்க்கப்படுகிறது. மானத்தை காக்கும் ஒரு கேடயம் தான் வெட்கம். மானத்தை காக்கும் ஒரு பொக்கிஷம் தான் ஆடை.

வெட்கத்தன்மைதான் மறைவிடங்களை மறைப்பதற்கு தூண்டுகோலாக அமைகிறது. மறைவிடங்களை வெளிப்படுத்துவது வெட்கமற்ற தன்மையின் வெளிப்பாடு. மானம் காப்பதும், மறைவிடங்களை மறைப்பதும் வெட்கத்தின் அடையாளம். ஒருவர் வெட்கப்படுவது நல்ல செயல் தான். வெட்கத்தை ஆடையாக அணிந்தவரிடம் மக்கள் குறை காணவோ, குறை கூறவோ முடியாது. அது மனித வாழ்வின் உயிர்மூச்சு போன்றது. வெட்கமுள்ளவன் நல்ல மனிதனாக வாழ்வான். வெட்கம் கெட்டவன் மிருகமாகவும், பாவியாகவும் மாறிவிடுகின்றான்.

வெட்கத்தால் நன்மை மட்டுமே விளையும். வெட்கம் தவறிவிட்டால், கண்டதும் செய்ய நேரிடும். வெட்கம் ஓர் அருங்குணம். அது நன்மையைத் தூண்டும். வெட்கமின்மை ஒரு துர்க்குணம். அது தீமையைத் தூண்டும்.

வெட்கம் இறைநம்பிக்கையைச் சார்ந்தது. இறைநம்பிக்கை சொர்க்கத்தை நல்கும். வெட்கமற்ற தன்மை முரட்டு சுபாவமாகும். முரட்டு சுபாவம் நரகத்தை நல்கும்.

மறைவிடங்களை வெளிப்படுத்துவது இறைநம்பிக்கைக்கு அப்பாற்பட்டது. மறைவிடங்களை மறைப்பது இறைநம்பிக்கையைச் சார்ந்தது. இறைநம்பிக்கையாளர்கள் தங்களது வெட்கத்தலங்களை வெளிப்படுத்தமாட்டார்கள். மறைத்து வாழ்வார்கள். வெட்கத்தலங்களை வெளிப்படுத்துவது மானக்கேடான காரியம்.

ஆடை என்பது இறைவன் மனிதகுலத்திற்கு வழங்கிய மகத்தான ஓர் அருட்கொடை. மனித இனம் தவிர வேறெந்த இனமும் ஆடை அணிவதில்லை. நாம் அணியும் ஆடை நமது மறைவிடங்களை மறைத்து, மானம் காக்க வேண்டும். மானம் பறிபோகக்கூடாது.

ஆடை எவ்வாறு மறைவிடங்களை மறைத்து மானத்தை காக்கிறதோ, அவ்வாறே கணவன் தமது மனைவியின் மானம், மரியாதையையும்; மனைவி தமது கணவனின் மானம், மரியாதையையும் பேணி பாதுகாக்க வேண்டும்.



## இலங்கையில்...

இதேவேளை, கொரோனா வைரஸ் சீனாவில் பரவும் நிலையில் அந்த நாட்டிலிருந்து வரும் பயணிகளைக் கட்டுநாயக்க விமான நிலையத்தின் சிறப்பு வெளியேறும் பிரிவினூடாக வெளியேற்றுவதற்கு நேற்றிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் விசேட மருத்துவப் பிரிவினூடாகப் பயணிகள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் விமான நிலையத்தின் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் அனைத்து ஊழியர்களையும் முகக்கவசத்தை அணிந்து கொள்ளுமாறும் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

**உயிரிழப்பு 80 ஆக உயர்வு**

சீனாவில் அசுர வேகத்தில் பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 80 ஆக உயர்வடைந்துள்ளது.

சீனாவின் ஹுபெய் மாகாண தலைநகரான உகான் நகரில் வசித்து வரும் மக்களை கடந்த மாத இறுதியில் கொரோனா எனப்படும் கொடிய வைரஸ் தாக்கியது.

இந்த வைரஸால் புதுவித நிமோனியா நோய்க்கு ஆட்பட்ட அவர்கள் அடுத்தடுத்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். பின்னர் இந்த நோய் தீவிரமடைந்து உயிரிழப்புகள் ஏற்பட்டன.

இந்த வைரஸ் சீனாவின் பிற பகுதிகளுக்கும் வேகமாகப் பரவி வருகின்றது. இந்த வைரஸுக்கு இதுவரை மருந்தோ, தடுப்பூசியோ இதுவரை கண்டுபிடிக்கப்படாததால் நோயின் வீரியத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

சீனாவின் தலைநகர் பீஜிங், ஷாங்காய் உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கும், ஹுபெய்யை சுற்றியுள்ள மாகாணங்களிலும் பலத்த பாதிப்பை கொரோனா வைரஸ் ஏற்படுத்தி வருகின்றது.

சீனா முழுவதும் கொரோனா வைரசுக்கு உயிரிழந்தோரின் எண்ணிக்கை நேற்று 80 ஆக ஆக உயர்வடைந்துள்ளது. அங்கு 2 ஆயிரத்து 684 பேர் இந்த வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

அதில் ஆயிரத்து 975 பேரை வைரஸ் தாக்கி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தீவிர சிகிச்சையில் இருக்கும் அவர்களில் 324 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

அசுர வேகத்தில் பரவி வரும் கொரோனா வைரஸுக்கு மருந்து மற்றும் தடுப்பூசி கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் சீன விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். (எ-22)

## அச்சம்...

வில்லை. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் சுகாதார ஊழியர்களிடம் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள் காணப்படினும், சீனா போன்று ஆபத்தான நிலமை இல்லை.

இலங்கையிலும் ஆபத்தான நிலைமை இல்லை. பொதுமக்கள் இந்த விடயத்தில் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை.

கொரோனோ வைரஸ் தொற்றுச் சாதாரண தடிமன், காய்ச்சல் ஏற்படுவது போன்ற தொற்றுத்தான். 2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சீனாவில் புதிய வகை கொரோனோ வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த வைரஸே தற்போதைய நோய் நிலமைக்குக் காரணம்.

இந்த வைரஸ் தொடர்பாக சீன அரசும், உலக சுகாதார நிறுவனமும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளன. இலங்கையில் சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு உரிய தகவல்களை வழங்கும். நாம் சில தற்காப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது நன்மையைத் தரும்.

அதிக எண்ணிக்கையில் சுற்றுலா பயணிகள் கூடும் இடங்களில் இந்தத் தற்காப்பு நடவடிக்கைகள் அவசியமாகும். சவற்காரமிட்டுக் கை கழுவுதல் மிகவும் முக்கியமானது. எத்தகைய தொற்று நோயாக இருந்தாலும் சவற்காரமிட்டுக் கைகளைக் கழுவுவதன் மூலம் 90 வீதம் நோய் பரவாமல் தடுக்க முடியும்.

பொதுவாக வைரஸ் தொற்றுக்களைத் தடுக்கும் உணவு வகைகள் உள்ளன. மரக்கறிகள், பழங்கள் (புளிப்பான பழங்கள்) போன்றவற்றை உணவுடன் சேர்த்துக் கொள்வதன் மூலம் கொரோனா வைரஸ் தொற்றைக் குறைக்க முடியும்.

தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும். கட்டுநாயக்க விமான நிலையம், சுற்றுலா பயணிகள் அதிகம் கூடும் இடங்களைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

சுகாதார அமைச்சு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைரஸ் தொற்று நோயாளர்களை இனங்கண்டு கொள்வதற்கான நவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதால் நாம் அச்சமடையத் தேவையில்லை- என்றார். (எ-20)

## மோசடிகளை...

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பி கருத்துத் தெரித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணைகள் முடிவடைந்திருக்கின்றன. மோசடிக்காரர்களுக்கு எதிராக சட்டமா அதிபரே வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்.

பிணைமுறி மோசடி தொடர்பான கோப் குழுவின் தடயவியல் கணக்கறிக்கை குறித்து பூரண அறிவில்லாதவர்கள் அது தொடர்பில் தொலைக்காட்சி விவாதங்களில் பேசக்கூடாது. அதேபோன்று இந்தத் தடயவியல் அறிக்கையை அரசியல்வாதிகள் யாரும் தங்களுக்குத் தேவையான முறையில் அரசியலாக்கவும் முற்படக்கூடாது. இது தொடர்பாக முறையான விசாரணை இடம்பெற்று மக்களுக்கு உண்மை நிலையை அறிந்துகொள்ள இடமளிக்க வேண்டும்-என்றார். (எ-22)

## மஹிந்த...

ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் அமரசேன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த விடயம் மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட கோப் குழு விசாரணைகளின் அறிக்கையில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் 689 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடியே நடந்துள்ளது. 2005 2015 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மாத்திரம் 10 ஆயிரத்து 457 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடி நடந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசில் ஊழலுடன் தொடர்புடையவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுமாயின் அதற்கு முன்னராக மோசடியில் ஈடுபட்ட மஹிந்த தலைமையினான அரச தரப்பினருக்கும் தண்டனை வழங்கப்படவேண்டும்.

இந்த விவகாரம் தொடர்பில் அப்போதைய மத்திய வங்கி ஆளுநரான அஜித் நிவாட் கப்ராலைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்த வேண்டும். முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜக்சவும் இந்த விவகாரத்துடன் தொடர்புபட்டுள்ளார்.

அவருடன் கூட்டுச் சேர்ந்தே கப்ரால் போன்றோர் மத்திய வங்கி மோசடியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான குற்றச்சாட்டுக்கு உள்ளானவரையா பிரதம வேட்பாளராக அறிவிக்கப் போகின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது-என்றார். (எ-22)

## சிவாஜிக்கு...

எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அவருக்கு நீதிமன்று பிடியாணை பிறப்பித்தது.

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியைக் கையகப்படுத்துவதற்காக அளவீடு செய்யநிலஅளவைத்திணைக்களத்தினர் சென்றிருந்தனர். அப்போது பொதுமக்கள் திரண்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், எம்.கே.சிவாஜி லிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். அப்போது அவர்கள் நில அளவீட்டுத் திணைக்கள அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்ததுடன், அரச சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக முல்லைத்தீவுப் பொலிஸார், முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கில் வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரனும், எம்.கே.சிவாஜிலிங்கமும் நீதிமன்றில் முன்னிலையாகிப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்குக் கடந்த ஓராண்டுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது.

இந்த வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் வழக்கு திர்வரும் மே மாதம் 18ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (எ-246)

## உறங்க...

யில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

சூசைமுத்து விக்டர் ஜெயராஜா (வயது-57) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணியளவில் வீட்டுக்கு வந்த அவர் உறங்கச் சென்றுள்ளார். பிற்பகல் 5.30 மணியளவில் அவரது மனைவி எழுப்பியபோது அவர் அசைவற்று இருந்துள்ளார். அதையடுத்து அவர் தெல்லிப்பளை மருத்துவனைக்குக் கொண்டு சென்றபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இறப்பு விசாரணகளை நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## விபத்தில்....

போது வீதியில் மாட்டுடன் மோதித் தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தார்.

உடனடியாக அவர் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், அவர் முன்னரே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்துத் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-110)

## தமிழக..

இவர்கள் தமிழகத்தின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர்கள் கடற்படையினரால் காங்கேசன்துறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

அவர்கள் மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் இன்று யாழ்ப்பாணம் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் கையளிக்கப்படுவர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (எ-105)





# இன்றைய நாள்

**மேடம்:** உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பிள்ளைகளின் நற்செயல் பெற்றோருக்கு பெருமை தரும். குடும்பத்தில் சுபநிகழ்வு உண்டாகும்.பொருள்களை இரவலாக கொடுக்கவோ, வாங்கவோ கூடாது.

**இடபம்:** காலையில் கலகலப்பும், மாலையில் சல சலப்பும் ஏற்படும் நாள். திருமணப் பேச்சுக்கள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும. புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். தொழிலில் புதிய பங்குதாரர்களை சேர்க்கும் எண்ணம் உருவாகும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**கடகம்:** பிறரை விமர்சிப்பதன் மூலம் பிரச்சினைகள் ஏற்படும் நாள். வீட்டு விவகாரங்களை வெளியில் சொல்லாதிருப்பது நல்லது. பிடிவாத குணத்தால் பிரச்சினைகள் அதிகரிக்கும்.பயன்ந்தராத பொருளை விலைக்கு வாங்க வேண்டாம்.

**சிம்மம்:** நேற்றையபிரச்சினை இன்றுநல்ல முடிவிற்கு வரும் நாள். மறதியால் நின்ற பணியை மீண்டும் செய்வீர்கள். தொழில் தொடர்பாகபுதியஒப்பந்தங்கள்வந்துசேரும். பணவரவில் இருந்த தடைகள் அகலும்.

**கன்னி:** மதிப்பும், மரியாதையும் உயரும் நாள். புது முயற்சிகளில் வெற்றி கிட்டும். தாய்வழிஆதரவுஉண்டு.உத்தியோகத்தில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும். சுணங்கிய காரியம் சுறுசுறுப்பாக நடைபெறும்.

**துலாம்:** பக்கத்திலுள்ளவர்களின் பாச மழையில் நனையும் நாள். சில தினங்களுக்கு முன்பு எடுத்த முயற்சி இப்பொழுது வெற்றி பெறும். தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**விருச்சிகம்:** தொட்டது துலங்கும் நாள். தன வரவு தாராளமாக வந்து சேரும். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முன்வருவீர்கள். தொழில் வளர்ச்சிக்கு வி.ஐ.பி.க்களின் உதவி கிடைக்கும்.

**தனுசு:** சொந்த பந்தங்களால் வந்த துயர் விலகும் நாள். நினைத்தது நிறைவேற நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும்.

**மகரம்:** யோசித்துச்செயல்பட வேண்டிய நாள். அலுவலகப் பணிகளினால் அலைச்சல்களைச் சந்திக்க நேரிடும். பணம் கைக்கு வந்த நிமிடங்களிலேயே செலவாகும்.

**கும்பம்:** புதிய பாதை புலப்படும் நாள். பூமி வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் நன்மையுண்டு. இடம்,பூமி வாங்கும் முயற்சி கைகூடும்.

**மீனம்:** புகழ்மிக்கவர்களைச் சந்தித்து மகிழும் நாள். தொழில் முன்னேற்றம் ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. ஆலய வழிபாட்டில் ஆர்வம் செலுத்துவீர்கள்.

# கொரோனா வைரஸால் 90 ஆயிரம் பேர் பாதிப்பு?

## செவிலியர் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல் இது



பீஜிங், ஜன. 28

சீனாவில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனா வைரஸால் இதுவரை 90 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சீனத்துச் செவிலியர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இணையத்தளங்களில் இதுகுறித்த காணொலி வைரலாகி வருகின்றது. இதுகுறித்து அந்தச் செவிலியர் வெளியிட்டுள்ள காணொலியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இந்த வீடியோவை பார்க்கும் மக்கள் அமைவருக்கும் வணக்கம். நான் இப்போது கொரோனா வைரஸ் எங்கு கண்டறியப்பட்டதோ அந்த இடத்தில் இருந்து பேசுகிறேன். நான் இங்கு உங்களிடம் உண்மையை பேச வந்துள்ளேன். சீனாவில் தற்போதுவரை கொரோனா வைரஸ்க்கு 90 ஆயிரம் பேருக்கும் அதிகமானோர்பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த கொரோனா வைரஸ் பற்றி உங்களுக்கு எந்த அளவுக்குதெரியும்? வைரஸ் பாதிக்கப்பட்ட நபரை தனிமைப்படுத்தி உரிய சிகிச்சை அளிக்கவில்லை என்றால் ஒரே சமயத்தில் 14 பேருக்கு இந்த வைரஸ் பரவி பாதிப்பை ஏற்படுத்தும். தற்போது சீனப் புத்தாண்டு (ஜனவரி 25) பிறந்துள்ளது. ஒவ்வொரு சீனரும் தனது சொந்த ஊருக்குச் சென்று குடும்பத்தினருடன் உணவருந்தி புத்தாண்டை கொண்டாட வேண்டுமென விரும்புகின்றோம். இருந்தபோதிலும், தற்போது நாம் மிகவும் அசாதாரண சூழ்நிலையில் உள்ளோம்.

இந்த வீடியோவை பார்க்கும் அனைவருக்கும் நான் கூறுவது என்னவென்றால், உங்கள் வீடுகளை விட்டு வெளியே செல்லாதீர்கள். எந்த கொண்டாட்டங்களிலும் ஈடுபட வேண்டாம். வெளியே சென்று எந்த உணவும் சாப்பிட வேண்டாம். ஆண்டுக்கு ஒருமுறை நாம் சீன் புத்தாண்டை கொண்டாடுகிறோம். நீங்கள் இப்போது பாதுகாப்பாக இருந்தால்தான் அடுத்த புத்தாண்டின்போதுஉங்கள்குடும்பங்களைச் சந்திக்க முடியும்.

அனைவரும் வுகான் மாகாணத்திற்கு முகமூடி, முகக்கண்ணாடி, துணிகளை நன்கொடையாக வழங்குங்கள். தற்போது மருத்துவமனைகளில்தேவையான பொருள்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. தயவுசெய்து எங்களுக்கு உதவுங்கள் - என்றுள்ளது. (ம)



# கொரோனாவால் இதுவரை 80 பேர் சாவு!



பீஜிங், ஜன. 28

சீனாவை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் காய்ச்சலுக்கு இதுவரை 80 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் வுகான் நகரில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது. இதுவரை 80 பேர் உயிரிழந்துள்ளனர். ஏராளமான நோயாளிகள் கவலைக்கிடமாக இருக்கின்றமையால் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது. (ம)




அமெரிக்காவை சேர்ந்த பிரபல விமானத் தயாரிப்பு நிறுவனமான 'போயிங்' உலகிலேயே மிகப்பெரிய இரட்டை என்ஜின் விமானத்தை தயாரித்துள்ளது. அந்த விமானம் 'போயிங் 777 எக்ஸ்' என்று அழைக்கப்படுகிறது. இந்த விமானத்தின் சோதனை ஓட்டம் மோசமான வானிலை காரணமாக 2 முறை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் சியாட்டில் நகரில் வெற்றிகரமாக நடந்தது. (ம)





### அமெரிக்கத் தூதரகத்தை

# இலக்குவைத்து 5 ஏவுகணைகள்!

பக்தாத், ஜன. 28

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகே ஏவுகணைத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டமை அங்கு பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து ஈராக் அதிகாரிகள் தரப்பில், 'ஈராக் தலைநகர் பக்தாத் அருகே அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்தில் ஞாயிற்றுக்கிழமை 5 ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதல் காரணமாக யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

சிலநாள்களுக்கு முன்னர் ஈராக்கிலிருந்து அமெரிக்க படைகள் வெளியேற வேண்டும் என்று லட்சக்கணக்கான மக்கள் பேரணி சென்றனர். இந்த நிலையில் அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ம)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

தோற்றம் 05.03.1939 — மறைவு 08.02.2019



கடந்த 08.02.2019 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று (28.01.2020) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இலலத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்

குடும்பத்தினர்.

இல.82, பலாலிவீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.



### எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின்

## பதினெட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்கும்பானின் மைந்தன்

## அமரர் ஐயம்பிள்ளை நடராசா

(மைதிலி நகைமாட ஸ்தாபகர்)

திதி: வளர்பிறை சதுர்த்தி (28.01.2020)



மலர்வு 14.04.1947 — உதிர்வு 17.01.2002

விநாயகர் அருளால் அவதரித்து
எம்மை அரவணைத்து வழிகாட்டிய
நீங்கள் இறைவனடி சென்று
ஆண்டுகள் பதினெட்டு ஆனதப்பா!
ஆண்டுகள் பல சென்றாலும்
நினைவுகள் எம் மனதில்
நிழலாக நிற்கின்றன

ஆயிரம் சொந்தங்கள் அருகினில்
இருந்தாலும் உங்களைப் போல்
அவனியில் யார் வருவார் அப்பா?
நீங்கா நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்றைய தினம் அன்னாரின் நினைவாக மண்கும்பான் வெள்ளப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் மணிமண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மைதிலி நகைமாடம், (தனியார் நிறுவனம்) 89 V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 222 7902

யாழ். மைதிலி ஜுவலர்ஸ், 79 Z, செட்டியார் தெரு, கொழும்பு - தொ.பே.011 239 6239

(IN/12406)(11.17)

கபடியில்

## சீ.ஆர்.சீ, சான்றோர் மகுடம் சூடியது

தென்மராட்சி பிரதேச இந்த வருடத்துக்கான கபடி போட்டியில் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி சீஆர்சீ அணியும், ஆண்கள் பிரிவில் நாவற்குழி சான்றோர் அணியும் சம்பியனானது.

பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான இந்த வருட கபடிப் போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

பெண்கள் பிரிவில் இறுதிப் போட்டியில் சாவகச்சேரி சீ.ஆர் .சீ அணியும், மட்டுவில் வளர்மதி அணியும் மோதின. போட்டி நிறைவில் 41:36 என்ற புள்ளிக் கணக்கில் சீ.ஆர். சீ அணி சம்பியனாகின.

ஆண்கள் பிரிவில் இறுதிப் போட்டியில் நாவற்குழி சான்றோர் அணியை எதிர்த்து கச்சாய் கலைமகள் அணி மோதியது. இதில் சான்றோர் அணி 55 : 38 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. (9)




52ஆவது சிரேஷ்ட பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில்

# யாழ். மாவட்ட அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜன.28

இலங்கை கூடைப் பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய 52ஆவது சிரேஷ்ட பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட கூடைப் பந்தாட்ட அணி கிண்ணம் வென்றது.

மட்டக்களப்பில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட அணி மோதியது. இதில் யாழ்ப்பாண மாவட்ட அணி 85:72 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

சிறந்த வீரராக யாழ்ப்பாண மாவட்ட அணி வீரர் சிம்றோன் தெரிவானார். ஒவ்வன் சி பிளேயர் விருதை யாழ்ப்பாண மாவட்ட அணி வீரர் கிசாந் பெற்றுக் கொண்டார். (23)










# கிண்ணம் வென்றது சைனிங்ஸ் அணி

யாழ்ப்பாணம். ஜன.28

வல்வை உதயசூரியன் விளையாட்டுக் கழகம் வல்வைக்குட்பட்ட அணிகளிடையே நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சைனிங்ஸ் அணி கிண்ணம் வென்றது.

சைனிங்ஸ் அணியை எதிர்த்து நேதாஜி அணி மோதியது .ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா 3 கோல்களை பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் சைனிங்ஸ் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக சைனிங்ஸ் அணி வீரர் பிரசாந், சிறந்த கோல் காப்பாளராக சைனிங்ஸ் அணியின் கோல்காப்பாளர் ஜெயச்சந்திரன், தொடரின் சிறந்த வீரராக நேதாஜி அணியின் தர்சன்.வளர்ந்து வரும் வீரராக தீருவில் அணி வீரர் சதன் தெரிவு செய்யப்பட்டனர். (23)







ஆபிரிக்கக் கறுப்பு மம்பா என அழைக்கப்பட்ட

# பிரபல கூடைப்பந்தாட்ட வீரர் கோபி விபத்தில் உயிரிழப்பு!

அமெரிக்காவின் பிரபல கூடைப்பந்தாட்ட வீரர் கோபி பிரையன்ட் ஹெலி விபத்தில் நேற்று உயிரிழந்தார். இவரது மறைவு ஒட்டுமொத்த உலகையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப், கால்பந்தாட்ட ஜாம்பவான் ரொனால்டோ, இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவான் கோக்லி என ஏராளம் பிரபலங்கள் கோபியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

41 வயதான கோபி பிரையன்ட்டுக்கு வனெஸ்ஸா என்ற மனைவியும், ஜியானா, பியான்கா, நடாலியா, காப்ரி என்ற நான்கு மகள்களும் உள்ளனர். நேற்று அதிகாலை தனது 13 வயது மகள் ஜியானா, மற்றும் பேஸ்பால் பயிற்சியாளர் ஜான் அல்டோபெல்லி, உள்ளிட்ட 8 பேருடன் கோபி பிரையன்ட் ஒரு தனியார் ஹெலிகொப்டரில் தவுசண்ட் ஆக்ஸ் என்ற இடம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். கடும் பனிமூட்டம் காரணமாக அடர்ந்த மரங்கள் சூழ்ந்த மலைப் பகுதியின் அருகே சிக்கிக் கொண்ட ஹெலிகொப்டர் சிறிது நேரத்தில் தீப்பிடித்து எரியத் தொடங்கியது. இதில் பிரையன்ட், ஜியானா உள்ளிட்ட ஹெலிகொப்டரில் பயணம் செய்த 9 பேரும் உடல்கருகி உயிரிழந்தனர்.

கோபி பிரையன்ட் ஏராளம் அமெரிக்கப் பட்டங்களையும், இரண்டு தடவைகள் (2008, 2012) ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களையும் வென்று இந்தத் தலைமுறையின் தலைசிறந்த கூடைப்பந்தாட்ட வீரராகத் திகழ்ந்தார்.



கறுப்பு மம்பா

கோபியை அனைவரும் கறுப்பு மம்பா என்று அழைப்பார்கள். கோபி ஒரு ஆபிரிக்க அமெரிக்கர். ஆபிரிக்காவில் உள்ள கறுப்பு மம்பா என்ற பாம்பு தான் பாம்பு இனங்களில் மிகவும் வேகமான தாக்குதல் தன்மை கொண்டதாக அறியப்படுகின்றது. இதனால்தான் கோபியை கறுப்பு மம்பாவுடன் ஒப்பிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# சித்திவிநாயகர் இந்து அணி 10 இலக்குகளால் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.28

இலங்கை பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுக்குட்பட்ட பிரிவு 3க்கான போட்டியில், சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அணி 10 இலக்குகளால் வெற்றி பெற்றது.

செட்டிகுளம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா செட்டிகுளம் மகாவித்தியாலய அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அணி 49.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் பகீர்த்தனன் 43 ஓட்டங்களையும், தஜீவன் 30 ஓட்டங்களையும், அருண் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் நிலக்சன் 4 இலக்குகளையும், அலெக்சன் 3 இலக்குகளையும், சுபாஷ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய செட்டிகுளம் மகாவித்தியாலய அணி 23.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 82 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அணி சார்பில் அனுஜன் 24 ஓட்டங்களையும், பவித்ரன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அணி சார்பில் லிவான்சன் 5 இலக்குகளையும், அனோஜன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

'பலோ ஒன்' முறையில் செட்டிகுளம் மகாவித்தியாலய அணியை தொடர்ந்து விளையாட பணிக்கப்பட்டனர். அதற்கமைய செட்டிகுளம் மகாவித்தியாலயம் தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய செட்டிகுளம் மகாவித்தியாலய அணி 35.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் சம்பத் 38 ஓட்டங்களையும், ஜன்சிகன் 27 ஓட்டங்களையும், சகிதன் 25 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் அனோஜன் 3 இலக்குகளையும், பிரியதர்சன், லிவான்சன், கிதுர்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், அனோஷ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

48 ஓட்டங்களை பெற்றால் வெற்றியென தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அணி 8.1 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கு இழப்பின்றி 51 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் கீர்த்தனன் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் தஜீவன் ஆட்டமிழக்காது 5 ஓட்டங்களையும் பெற்றனர். (23)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ,இ,சி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.போதன வைத்தியசாலை அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



# மகுடம் சூடியது சென்.நீக்கிலஸ்

யாழ்.கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு கோண்டாவில் வடக்கு மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் க்ழக மைதானத்தில் மாலை 4 ம்ணிக்கு இடம் பெற்ற இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)

# 18 ஆம் ஆண்டு நினைவலைகள்

**மண்கும்பானின் மைந்தன்**

அமரர்

## ஐயம்பிள்ளை நடராசா


[உரிமையாளர் - நியூ மைதிலி ஜுவலர்ஸ்]



மலர்வு
14.04.1947

உதிர்வு
17.01.2002

திதி: 28.01.2020 (தை மாத வளர்பிறை சதுர்த்தி)



**அன்புள்ள அப்பா!**

தோற்றச் சுடரொளியாய்
சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்து வந்துதித்த அப்பாவே!
உங்கள் பிரிவு இன்றுடன் பதினெட்டு வருடமாச்சு
தேற்றுவதற்கு யாருமில்லை தெளிவு
- பெற முடியவில்லை

ஆற்றாமல் ஐயா
அழுகின்றோம் நாள்தோறும்
நீக்கமின்றி எம்மனத்தில்
நிலைத்திருப்பீர் எப்போதும்.



அன்னாரின் நினைவையொட்டி
இன்று (28.01.2020) செவ்வாய்க்கிழமை
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வகத்திலும்,
தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை
பண்பாட்டுப் பேரவையிலும் இடம்பெறும்
மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்
மற்றும் ஆதரவாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நியூ மைதிலி ஜுவலர்ஸ்
(ந.கஜந்தன்)
38,40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**021 221 7878 / 021 221 7877**

என்றும் நினைவுடன் வாழும்:
குடும்பத்தினர்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.